Registeardas a NewsPaper பக்கங்கள் 08 விலை ரூபா: 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 30 (13-03-1992) வெள்ளிக்கிழமை ஓசை: 24

## உவர்நீர் தடுப்பு திட்டம் 'யு. எஸ். எயிட்' உதவி

யாழ். குடாநாட்டிற்குள் உவர்நீர் ஊடுருவுவதைத் தடுக்கும் உவர்நீர்த்தடுப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ''யு. எஸ் எயிட்'' நிறுவனம் முன்வந் திருக்கின்றது. குடாநாட்டின் கரையோரத்தினுள் உவர் நீர் அதிகளவு ஊடுருவுவதும் பாதிப்பிற்குள்ளாவதுமாகிய பிரதேசமென கண்டறியப்பட்ட பகுதியான தொண்ட மானாறில் இருந்து வடமராட்சி கிழக்கு கடற்கரைப் பகுதி வரையான இடங்களிலேயே (8ஆம் பக்கம் பார்க்க)

# ராஜீவ் கொலை: தலைவர் பிரபா மீது இந்தியா வீண் பழி சுமத்துகிறது

## மத்திய அரசாங்கம் மீது சீக்கிய தலைவர்கள் கண்டனம்

(சென்னை)

''ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்புபடுத்தி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எதிராக இந்திய மத்திய அரசு விசமப் பிரசாரம் செய்து வருவதாக குர்சண்சிங்தோரா, சிமரஞ்சித் சிங்மான் ஆகிய இரு சீக்கிய தலைவர்களும் இந்திய மத்திய அர சைக் கண்டனம் செய்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை 'இந்து' பத்திரிகை நிருபர்க ளுக்கு பேட்டியளித்த குர்சண் சிங்தோரா, சிம்ரஞ்சிற்சிங் மான் ஆகிய இருவரும் இக் கண்டனத்தை தெரிவித்துள் ளனர். இவ்இருதலைவர்களும் கடந்த ஒரு மாதகாலமாக பஞ்சாப் மானிலத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

''விடுதலைப் புலிகளின் தலைவருக்கு எதிரான விசமப் பிரசாரம் எங்கென்றாலும் வாழும் சிறுபான்மை இனங் களின் அபிலாசைகளை நசுக்கி விடுவதற்கான இந்திய மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு அங்கமே.'' என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் முன்னாள் இந் தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டமைக் கான குற்றத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபா கரன் மீது சுமத்துவதற்கு இந் திய மத்திய அரசு மேற் கொள்ளும் முயற்சிகளையும் அவர்கள் கண்டனம் செய்துள் ளனர்.

### இரத்மலானை வெடிச்சத்தம்

## குண்டு வெடிப்பு இல்லை 'ஜெற்' விமான இரைச்சலாம்

(கொழும்பு)

விமானப்படை ஜெற் விமா னம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட பெரும் இரைச்சலே நேற்று முன் தினம் இரத்மலானை பகுதி யில் கேட்ட பெரும் வெடிச் சத்தமாகும் என விங் கொமா ண்டர் விஜித தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை நேற்று நடை பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் வெளியிட் டார். அப்பகுதியில் பெரும் வெடிகுண்டு வெடிப்பு இடம் பெற்றதாக கூறப்படுவதை அவர் முற்றாக மறுத்தார்.

தென்திசைக்கு அப்பாலு ள்ள கடலில் 33 ஆயிரம் அடி உயரத்தில் பயிற்சியில் எவ் - 7 ரக ஜெற் விமானம் ஈடுபட்டி ருந்த போதே இந்தப் பேரி ரைச்சல் எழுந்ததாக அவர் மேலும் விளக்கிக் கூறினார்.

பல மைல்களுக்கு அப்பால் இந்த பேரிரைச்சலின் அதிர்வு களை உணரக் கூடியதாக இருந்தது. சிறிலங்காவில் இவ் வளவு பேரிரைச்சல் ஏற்பட் டது இதுவே முதல் தடவை என அவர் மேலும் தெரிவித் தார்.

இந்த சம்பவத்தில் பலர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டிருப்பதாகவும் குண்டுவெடி ப்பு நடந்த இடத்தை உலங்கு வானூர்திகள் தேடிவருவதாக செய்திகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## தெரிவுக் குழு சிபார்சுகள் ஏப்ரல் மத்தியில் கிடைக்கும்

[கொழும்பு]

எதிர்வரும் தமிழ் - சிங்கள புதுவருட ஆரம்பத்தில் வடக் குக் கிழக்குப் பிரச்சினை தொடர்பான பாராளுமன் றத் தெரிவுக்குழுவின் அறிக் கையும் சிபார்சுகளும் பாராளு மன்ற சபாநாயகரிடம் சமர்ப் பிக்கவிருப்பதாக சிறிலங்கா அரசின் அதிகார வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

இந்த மாதம் 15 ஆம் திகதி க்குப் பின்னர் இக் குழு முன் னிலையில் சாட்சியமளிக்க முடியாது என்றும்.

அறிக்கை தயாரிப்புவேலை கள் இந்தமாத இறுதிக்குள் ஆரம்பமாகும் என்றும், சுமார் ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை பூர்த்தி செய்யப் பட்டு ஏப்ரல் புது வருடத்தை யொட்டி பூரண அறிக்கை களும் சிபாரிசுகளும் சபாநாய கரிடம் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## பௌத்த பிக்குகளின் சமாதான தூதுக்குழு

### விரைவில் யாழ்ப்பாணம் வரும்

(கொழும்பு)

பௌத்த பிக்குகளின் சமா தான தூதுக்குழுவொன்று விரைவில் யாழ்ப்பாணம் வர வுள்ளதாக கொழும்பிலிருந்து வெளி வரும் ஆங்கில பத்திரி கையொன்று செய்திவெளியிட் டுள்ளது. இந்த தூதுக்குழுவில் இரண்டு முன்னணி பௌத்த பிக்குகள் அங்கம் வகிக்கின்ற னர்,

இந்த தூதுக்குழுவிற்கு சிறி அமரபுர பீடாதிபதி சிந் தாந்ததேரோ தலைமைவகிக்கி றார். இவர்கள் இந்த மாதக் கடைசியில் யாழ்ப்பாணத்தி ற்குவருகை தர உள்ளதாக தெரியவருகிறது.

இவர்களின் வருகையின் போது விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களை சந் தித்து சமாதானபேச்சு வார்த் தைகளில் ஈடுபடுவார்கள் எனத் தெரியவருகிறது.

## மன்னார் பயணிகளுக்கான போக்குவரத்து அனுமதி

மன்னார் தீவிற்குள் கடமை யாற்றும் யாழ். மாவட்டத் தைச் சேர்ந்த ஊழியர்கள் அவர்கள் அங்கு வேலை செய் வதனை உறுதிப்படுத்தி பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப் பாளரின் கடிதத்துடன் சென்று மன்னார்த் தீவிற்குள் செல்வதற்கான பிரத்தியேக மாக உள்ள விண்ணப்பப்படி வத்தை மடு, விடத்தல் தீவு ஆகிய அவசர அனுமதி வழங் கும் காரியாலயங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான விண்ணப்பப்படிவம் மன்னார் தீவுக்குள் செல்வதற்கு ஏற் றுக்கொள்ளப்பட மாட்டாது இத்தகவலை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு அறிவித் திருக்கிறது.

## போக்குவரத்து அனுமதி புதிய நடைமுறை

மோசடிகளைத் தவிர்க்கும் நோக்குடன் வடபகுதிக்கு உள்ளே நுழையும் பயணிகள் அனுமதி அட்டையினை அவ் அனுமதி அட்டையில் குறிப் பிட்டுள்ள திகதியிலிருந்து 15 (பதினைந்து) நாட்களுக்குள் மீளவும் வடபகுதியை விட்டு வெளியே செல்வதாயின் மட் (8 ஆம் பக்கம் பார்க்க)

### பேசாலையில்

## அகதிமுகாம் சுற்றிவளைப்பு ஒன்பது பேர் கைது

(மன்னார்)

மன்னார், பேசாலை அகதி முகாமை சுற்றிவளைத்த சிறி லங்கா இராணுவத்தினர் ஒன் பது பேரை கைதுசெய்து முகாமிற்கு கொண்டு சென் றனர் இவர்களில் ஏழுபேர் பின்னர் விடுதலை செய்யப் பட்டனர்.

ஏனைய இருவரும் தொடர் ந்தும் சிறிலங்கா இராணுவத் தினரால் தடுத்து வைக்கப்பட் டிருப்பதாக செய்திகள் தெரி விக்கின்றன.

### சித்தாண்டியில்

## ராணுவ அணிமீது தாக்குதல் குறுகிய தூரத்தில் மோதல்

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுத லைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இந்த தாக்குதல் நேற்று முன்தினம் இடம் பெற்றதாக தெரிவிக் கப்படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் நெவில் கூறியது அவரது சொந்தக் கருத்தாம்

(கொழும்பு)

சென்னையில் இலங்கைத் தூதுவர் நெவில்கனகரட்னா தன் சொந்தக் கருத்துக்க ளையே கூறினார். சமாதா னப் பேச்சுப்பற்றிய நிலையை அரசு இன்னமும் வெளிப் படுத்தவில்லை என்று சிறிலங் காவின் வெளிவிவகார அமைச் சர் ஹரோல்ட் ஹெரத் விளக் கமளித்துள்ளார்.

தென் இலங்கைப் பத்திரி கைகளுக்கு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நெவில் கனகரத்தின தெரிவித்த கருத் துக்கள் தொடர்பாக விளக்க மளிக்கையிலேயே ஹரோல்ட் ஹெரத் இவ்வாறு தெரிவித் தார்.

விடுதலைப் புலிகள் இயக் கத் தலைவர் வே. பிரபா கரனை சரணடையுமாறு சென்னை விசேட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளு டன் சமாதானப் பேச்சுவார் த்தை நடத்துவது தொடர் பாக தனது நிலைப்பாட்டை சிறிலங்கா அரசாங்கம் இன் ( 8 ஆம் பக்கம் பார்க்க)

வெளிவந்துவிட்டது

ஈழநாதம் வெளியீடான

**காலமும் கோலமும்**

ஓவியர் தயாவின் கருத்தோவியங்கள்

கிடைக்குமிடம் :-

பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்


### சிறுகதை எழுத

''சிறுகதை எழுத விரும்புவோர்க்கு எனது பட்டறிவுக் குறிப்புகள்'' - வரதர் எழுதியது. ரூபா 18/- எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம் (2289)

### விடுகதைகள்

புத்தகக் கடைகள் ஏறி இறங்கிக் கால் நோகிறதா? மீண்டும் வெளிவந்துவிட்டது. ''நொடியும் விடையும்'' பாகம் II மூன்று பாகங்களையும் வாங்கிக் கால்நோ மாறும் வரை வீட்டிலிருந்து படித்தால் உங்களுக்கு ஆயிரம் ரூபா பரிசும் கிடைக்கும். முடிவு இம் மாதம் முப்பத்தொராம் திகதி தொகுப்பாசிரியர்:'கோப்பாய் சிவம்' (2278)

### ''பெண்களே உங்களுக்கு''

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டதும், பெரியார்களின் சீரிய கருத்துக்களைக் கொண்டதுமான மேற்படி நூலைப் பத்து மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/4040)

### குழந்தைகள் வைத்தியம்

தீவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலையம் K. K. S. வீதி மனோகரா சந்திக்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவிலுள்ள இருபாலைச் சந்தியிலும் இயங்குகின்றது. (2284)


## தீப் 'பிடித்து இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

மேசையிலிருந்த குப்பி விளக்கு தவறி வீழ்ந்ததில் சுன்னாகத்தைச் சேர்ந்த உதயகுமார் (வயது 17) என்ற இளைஞன் உடல் முழுவதும் பலத்த எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் புதன் இரவு பத்து மணியளவில் நடைபெற்றது. (ச)

## படகுகள் காலியில் வெள்ளோட்டம்

(கொழும்பு)

பிரதமரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி.பி.விஜயதுங்கா ரணகஜா, தக்சிணா என்ற பெயருடைய இரு கடற்படை படகுகளை காலியில் வெள்ளோட்டம் விட்டுள்ளார். இலங்கை கடற்படையைச் சேர்ந்த ரணகஜா, என்ற படகு, யுத்த முனையில் சேவையாற்றுமெனவும், தக்சிணா என்ற படகு பழுது பார்த்தல், மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கும் பிராந்திய பாதுகாப்பு நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

## ஆலைகளை மூடிவிட உத்தரவு

(கொழும்பு)

தென்பகுதி கரையோரத்திலுள்ள இருநூறுக்கும் மேற்பட்ட சுண்ணாம்பு ஆலைகளை மூடிவிட கரையோரப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடலோர முருகைக் கற்கள் அகற்றப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படாவிடில் கரையோர பாதுகாப்பிற்காக மேலும் உதவி வழங்குவது அர்த்தமற்ற செயல் என்று வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் தெரிவித்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

# சீர்திருத்த நிராகரிப்புகள் அழிவுக்கு வழிசமைக்கும்

(ஜொகனஸ் பேர்க்)

அபிப்பிராய வாக்கெடுப்பில் தனது இன ஒதுக்கல் சீர்திருத்தத்தை தோல்வியுறச் செய்தால் கறுப்பு இனமக்களின் கோப அலைகளை எதிர் நோக்க வேண்டியிருக்குமென தென்னாபிரிக்க ஜனாதிபதி எப். டபிள்யூ. கிளர்க் சிறுபான்மை வெள்ளையருக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

நேட்டால் மாகாண தலைநகரில் தனது தேசியக் கட்சியின் மூவாயிரம் ஆதரவாளர்கள் அடங்கிய கூட்டத்திலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

இனஒதுக்கல் சீர்திருத்தத்துக்கு ''இல்லை'' என வெள்ளையர்கள் வாக்களிப்பார்களேயானால் அது அழிவுக்கே வழி செய்யும் கறுப்பர்கள் பொங்கி எழுவர். வலது சாரிக் கன்சர் வேட்டிவ் கட்சியின் கொள்கை அழிவுக்கே வழிசமைக்கும் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 17 ம்ஆ திகதி இனஒதுக்கல் சீர்திருத்தம் சம்பந்தமாக தென்னாபிரிக்காவில் வெள்ளையர் மத்தியில் அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

## உரியவர் பெற்றுக் கொள்ளவும்

நாவற்குழியில் செ. யோசப் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட உணவுப் பொருள்களுடன் கூடிய சாக்கொன்றுஎமது காரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் முச்சக்கர வண்டி மற்றும் சிற்றூர்தி உரிமையாளர்களுக்கான விசேடகூட்டம் நாளை மாலை நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற உள்ளது.

மாலை 1 00 மணிக்கு முச்சக்கர வண்டி உரிமையாளர்களும், 2.00 மணிக்கு சிற்றூர்தி உரிமையாளர்களும் இக்கூட்டத்திற்கு சமுகம் தரும்படி போக்குவரத்துப் பிரிவு அறிவித்துள்ளது.


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 ம;ணிக்கும்

காண்பிக்கப்படுகின்றது

FIVE FOR HELL

(நரகத்திற்கு ஐவர்)

(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

[சி/4011]


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை பாபு**

**(பேரின்பநாயகம் குணநாயகம்)**

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 05-09-1972 | 13-03-1989 |


ஆண்டு மூன்று சென்றாலும்
உம்மை என்றும் மறவோம்!

- குடும்பத்தினர்

குணநாயகம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (2285)

## 4-ம் வருட நினைவஞ்சலி

| தோற்றம் | வீரச்சாவு |
|---|---|
| 17 — 03 — 67 | 13 — 03 — 88 |



**வீரவேங்கை றொசானி**

**(சுதாங்கனி செல்லத்துரை)**

இந்த மண்ணில் கால் பதித்த
அந்நியரை எதிர்த்து நின்றீர்!
சொந்த வாழ்வின் சுகம் தேடமறுத்து
தந்தையர் நாட்டின் தளைகள் உடைக்க
வெஞ்சமர் ஆடினீர் வேங்கைகளாக
அஞ்சாமல் தொடர்வோம் உம்வழிநாமும்
அன்னை மண்ணிதை மீட்டிட என்றே!

வேணாவிலில் நடைபெற்ற இந்தியப் படையினரின் முற்றுகையின் போது இவருடன் வீரச்சாவெய்திய போராளிகளுக்கும் எமது வீரவணக்கங்கள்.

''சந்திரோதயம்''
கொடிகாமம்.

பெற்றோர், உறவினர்,
ண்பர்கள்.

(சி/4044)

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-13

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மயிலிட்டி, அக்கத்தனைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட இரு குழந்தைகள் ஒரு பெண் உட்பட நான்கு தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு முத்தையன் கட்டில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**றோஸ்மன்** [சி. பாஸ்கரன் - முத்தையன்கட்டு.]

**வின்சன்** [3 -ம் வாய்க்கால், கிளிநொச்சி.]

**பொடியப்பு** [விளான்.]

இந்தியாவிலிருந்து பேச்சுவார்த்தைக்கென அழைத்து வரபபட்டு, முல்லைத்தீவு, தேவிபுரம் பகுதியில் வைத்து இந்தியப்படையினரால் வஞ்சகமாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்ட

**லெப். கேணல் ஜொனி** [விக்னேஸ்வரன் விஜயகுமார் - புலோலி தெற்கு, பருத்தித்துறை]

வேணாவில் பகுதியில் எமது முகாமொன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். இமெல்டா** [மரியகோசி அமிர்தநாதர் - 151, 4 -ம் குறுக்குத்தெரு, மணியம்தோட்டம்.]

**றொசானி** [சுதாங்கனி செல்லத்துரை - 'சந்திரோதயம்', கொடிகாமம்.]

**சுகி** [துஷ்யந்தி நடேசபிள்ளை - நீர்வேலி.]

**சுரபி** [மஞ்சுளா - திருநகர், கிளிநொச்சி ]

இதே சம்பவத்தின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கெலன்** [அனுசியாதேவி - வெடியரசன்வீதி, காரைநகர்.)

**டொறின்** [சாந்தினி துரைசிங்கம் - வெள்ளாம் போக்கட்டி, அல்லாரை.)

1989 ஆம் ஆண்டு யாழ். கலட்டிப்பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது, காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பாபு** [பேரின்பநாயகம் குணநாயகம் - திருநெல்வேலி கிழக்கு.)

மன்னாரில் தேசவிரோத சக்திகளினால் அடித்துக் கொல்லப்பட்ட மாணவன்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு / தன்னாமுனை, சீனன்வாடிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கி இருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**மல்கோத்ரா** [சிற்றம்பலம் கோணேஸ்வரன் - பெரிய உப்போடை, மட்டக்களப்பு.]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4042)

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்




விடுதலைப்புலிகள் இயக்க முகாம்கள் எல்லாமே ஒவ்வொரு குடும்பம் போன்றவை. ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவரை எவ்வளவுக்கு நேசிப்பார்களோ அதே போலத்தான் இங்கும் இருக்கும். அதைப் போலத்தான் சின்னச்சின்னப் பிரச்சினைகள் தோன்றும், பின்னர் சமாதானமாவார்கள். ஆனால் ஒரேயொரு பிரச்சினையில் மட்டும் இலகுவில் சமாதானம் தோன்றாது - அது தாக்குதல்களுக்கு தம்மைக் கூட்டிக் கொண்டு போகாமல் விடுவதால் வரும் பிரச்சினை. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாக குமுறுவார்கள். இந்த விடயத்தை கிளப்பும் ஒருவன் எந்த விளக்கத்தையும் கேட்கத் தயாரில்லாதவனாகவே இருப்பான். அவனது இதயத்தின் குமுறல் அடுத்த போர்க்களத்தில் துப்பாக்கியை இயக்கும் வரைக்கும் ஓயாது.


இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவனாக இருந்த றெஜிக்கு கூட இந்த மனோபாவம் இருந்தது. பயிற்சி எடுத்து முடிந்திருந்த காலத்தில் எந்த மோதலுக்குமே சந்தர்ப்பம் கிடைக்காமல் குமுறினான் அவன். அந்தக் காலத்தில் கிடைத்த சந்தர்ப்பங்களிலும் ஏனையோர்தான் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்டோரைவிட றெஜி வயதில் கூடியவன். இதைப் பார்க்கும் போது அவனுக்கு இன்னும் கோபம் வந்தது. ஒரு நாள் கோபத்துடன் கூறினான்: ''நான் தலைவருக்குச் சொல்லப்போறன். எனக்குப் பென்ஷன் தாருங்கோ எண்டு. இவ்வளவு காலம் இயக்கத்தில இருந்தும் இன்னும் சண்டைக்குப் போகாமல இருந்திருந்து வயசும் ஏறிப்போச்சு. இந்தப் போக்கில போனா 55 வயசிலயும் பீல்ட்டுக்குப் போறது சந்தேகம். பேசாம பென்ஷன் கேட்டிட்டா நல்லது'' என்றான். பின்னர் அவனது போராட்ட வாழ்க்கையில் கிடைத்த முதல் சந்தர்ப்பமான ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது உள்ளே அவன் சென்ற வேகம்-சண்டையிட்ட விதம் - ''என்னை இத்தனை நாள் சண்டையிட அனுமதிக்காதது எத்தனை பெரிய தவறு'' என்று கேட்பதைப் போல இருந்தது.

இயக்கத்தின் மூத்த உறுப்பினனான றெஜியாலேயே தன்னை தாக்குதலுக்கு அனுப்பாததற்கு விசேட காரணம் எதுவும் இல்லை என்பதை ஒப்புக்கொள்ள முடியவில்லையானால் முகாமில் எல்லோருக்கும் பிரியமானவனாக - எல்லோருக்கும் சின்னவனாக இருந்த கெங்காவால் மட்டும் எப்படி அந்த நிலையைச்சகித்துக் கொள்ள முடியும்? அதுவும் நாம் வாழ்வதற்கான போராட்டம் இது என்பதை எமக்கு உணர்த்திக்கொண்டிருக்கும் திருமலை மண்ணில் பிறந்த அவனால் - அவனைத் தவிர்த்து-அவனது கண்ணுக்கு எதிரேயே - ஏனையோர் சிறிலங்காப்படைகளுக்கு எதிரான தாக்குதல்களுக்காக புறப்படுவதை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? தாக்குதலுக்கு அவனைக் கூட்டிச் செல்லாத முகாம் பொறுப்பாளர் அவனது முகத்தில் சிரிப்பை எதிர்பார்ப்பதற்கு என்ன நியாயமுண்டு? சிரிக்காதது மட்டுமல்ல அவர்களுடன் கதைக்காமல் கோபம் போட்டும் விடுவான் கெங்கா. அவனைச் சமாதானப்படுத்துவதென்றால் - மீண்டும் அந்த முகாம் பொறுப்பாளருடன் அவன் கதைக்கவேண்டுமென்றால் - நிச்சயம் அடுத்த தாக்குதலில் பங்குபற்ற அவன் அனுமதிக்கப்படவேண்டும்.

1985ஆம் ஆண்டில் நடுப்பகுதியில் இயக்கத்துடன் இணைந்து கொண்ட கெங்காவின் சொந்த இடம் திருமலை நகரிலிருந்து 16மைல் தொலைவில் உள்ள கும்புறுப்பிட்டி என்ற கிராமமாகும். தந்தையை இழந்த இவனுக்கு தாயைத்தவிர வேறு எந்தச் சொந்தமுமில்லை. அவனது உலகம் - குடும்பம் எல்லாமே இயக்கம்தான். அண்ணா - அக்கா-தம்பி- தங்கைச்சி எல்லா உறவையும் அவன் இந்தப் போராட்டத்தை நேசித்தவர்களிடமே கண்டான். அதே போல பிறராலும் நேசிக்கப்பட்டான்.

இவனது கடின உழைப்பு, போராட்டத்தின் மீது இவன் கொண்ட பற்று என்பன ஏனையோருக்கு முன் மாதிரியாக இருந்தன. பன்குளம், தம்பலகமம், சாம்பல்தீவு பகுதிகளில் சிறிலங்காப் படையின் மீது மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களின் வெற்றிக்கு இவனது கடினமான உழைப்பே காரணமாக இருந்திருக்கின்றன.

இவன் பங்குபற்றிய தாக்குதல்களில் இரு தாக்குதல்கள் இவனுடன் பழகிய போராளிகளால் மறக்கப்பட முடியாதவை. சிங்களக் குடியேற்றத்தால் மொறவேவா எனபெயர் மாற்றம் செய்யப்பட்ட முதலிக்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினரின் ட்றக் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் அந்த மண்ணுக்குச் சொந்தமில்லாத வெதமாத்தயா என்ற ஆக்கிரமிப்பாளன் உட்பட 23பேர் கொல்லப்பட்டனர்.



## கெங்கா

சிறிலங்காப் படையினரை முழுமனிதராகக் கணித்து பழக்கமில்லாத லங்காபுவத் இச்சம்பவத்தில் இரு உயர்அதிகாரிகள் உட்பட எட்டுப்படையினரும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டதாக தெரிவித்தது. கொல்லப்பட்டவர்கள் எயர்லீடர் கிறஷ் பெக், எயர் லீடர் பெர்ணாண்டோ, விமானப்படை தொழில்நுட்ப வியலாளர்கள். ஜே பி. ஜீ பெர்ணாண்டோ, பி.எம் டீ.ஆர். வீரசிங்க, ஐ.எல் இந்திரசாந்த மற்றும் ஆர்.டீ கொட்டாச்சி, வீரசிங்க லாமசிறி, என்.ஏ.கே லக்ஸ்மன், ஏ. ஜீ பியதாஸ என்ற படை வீரர்களும் கணேவத்த வெதமாத்தயா என்ற பொதுமகனும் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டது. அத்துடன் தாக்குதலுக்குள்ளாகிய ட்றக்கின் எஞ்சின் 100 மீற்றர் தூரத்தில் காணப்பட்டதாகவும், பலியான படைவீரர்களின் உடல்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 200மீற்றர் தூரம்வரை சிதறுண்டு கிடந்ததாகவும் குறிப்பிட்டது.

அப்போதைய திருமலை மாவட்டப் பொறுப்பாளர் சந்தோஷம் தலைமையில் நடைபெற்ற இத்தாக்குதல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இதேபோல குரங்குப்பாலத்தில் சிறிலங்காப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இவன் செயற்பட்ட விதம் இவனுடன் பழகிய போராளிகளால் மறக்கப் படமுடியாததாகும். இத்தாக்குதலில் எப்படியும் தான் ஒரு ஆயுதத்தைக் கைப்பற்றி விடவேண்டும் என்ற வைராக்கியம் இவனுள் எழுந்தது. சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்த துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியில் காயப்பட்டுக்கிடந்த சிறிலங்காப்படை வீரனை நோக்கி இவன் ஓடிய வேகம்- அவனது ஆயுதத்தைக் கைப்பற்றிக்கொண்டு வந்த திறமை -இவையெல்லாம் விபரிப்பதற்கு வார்த்தைகள் இல்லாத காட்சிகளாகும்.

ஒவ்வொரு தாக்குதலின் முடிவிலும் ''கெங்கா இப்படிச் செய்தான்'' என்றெல்லாம் கதைத்துக் கொள்ளும் போராளிகள் 02-10-1986 இல் சாம்பல் தீவுப்பகுதியில் இடம் பெற்ற பாரிய இராணுவ முற்றுகையைப் பற்றி மட்டும் கதைப்பதில்லை. ஏனெனில் துக்கம் அவர்கள்வாயை அடைத்துக்கொள்ளும். அந்த முற்றுகையைமுறியடித்துக்கொண்டு போனவர்களில் இவனும் கப்டன் றொபினும் இடம்பெறவில்லை. கணவனை இழந்த நிலையில் தனது உடலில் உயிர் ஒட்டியிருப்பது இவனுக்காகத் தான் என்றிருந்த இவனது தாய்க்கு அவள் கேட்க விரும்பாத செய்தியைச் சொன்னார்கள் போராளிகள்.

அந்தத் தாய்க்கு ஆறுதல் கிடைக்கவில்லை. சொல்லி அழக்கூடச் சொந்தம் இல்லையென்று நடைப்பிணமானாள் அவள். அவளுக்குத் தெரியவில்லை அவனது மரணம் அவளைப் போலவே திருமலை மாவட்டப் போராளிகளை- இந்த விடுதலையை நேசித்த உள்ளங்களைப் பாதித்ததென்று நடைப்பிணமாக அவள் திரிந்த நிலை கூட சில மாதங்கள் வரைதான் நீடித்தது. கிணற்றின் வடிவில் அவளை ஏற்றுக்கொண்ட மரணம் அவளது துயரங்களையும் ஏற்றுக் கொண்டது.

# தமிழீழத்தில் கம்பனுக்கு ஒரு பெருவிழா

## ஓர் அவதானியின் கண்ணோட்டம்

அநு. வை. நாகராஜன்

இன்று தமிழீழம் முழுவதும் யுத்த கருமேகங் கவிந்திருக்கிறது. எங்கும், எதிலும் பயம் - பீதி - அவலம் - இழப்புகள் எனமக்கள் அல்லலுற்று, ஆற்றொணாது அவதியுறுகின்றனர். இருந்தும் - இவர்கள் மனந்தளர்ந்து நிற்கவில்லை. நிமிர்ந்து நிற்கிறார்கள். இவர்தம் தளர்வின்மைக்கும் - நிமிர் உணர்வுக்கும் காரணங்கள் பல கூறினும், இவரது மொழியினூடே இழையும் கலாசாரப் பற்றே முதற்காரணம் எனச்சுட்டலாம். தமிழின் இயல் - இசை - நாடகப் பண்பாட்டு உணர்வின்பால், தாம் எதிர்கொள்ளும் எத்துணை துன்பங்களையும்- இடர்களையும் தூசெனக் கருதி வாழ்கிறார்கள். ஆதலின், எவ்வித இடர் வந்துற்ற போழ்தினும், இவர்கள் ஆடுநர் - பாடுநர் ஆக இருக்கின்றரே அன்றி, இவர்களில் கவல்கின்றார் ஒருவரும் இல்லை.

காலத்துக்குக் காலம், தமிழ் விழா - தமிழ் மாநாடு - தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்று பல விழாக்களையும் மாநாடுகளையுங் கண்டு களித்த பெருமை யாழ்ப்பாணத்துக்கு உண்டு அந்த வரிசையில் - அரசியல், பொருளாதார - சமூக நெருக்கடிகள்பல சூழ்ந்த இந்தக்கால கட்டத்தில, தமிழ்மீது கொண்ட ஆத்மார்த்த பற்றினால் - பாசத்தால் நான்கு நாள் தொடர்ந்து கம்பன்புகழ் பாடி, கன்னித் தமிழை வளர்க்க அகில இலங்கைக் கம்பன் கழகம் கங்கணங் கட்டியதோடு. அதனைச் செயலுருவிலுஞ் செயற்படுத்தி வெற்றி கொண்டதை இங்கு நினைவு கூர்வதில் ஒவ்வொரு தமிழ்நெஞ்சமும் புளகாங்கிதம் எய்துகிறது.

★ ★ ★

அன்று (14.02.92) மாலைப் பொழுது. யாழ். நல்லூர் முருகனாலய மேற்கு - வடக்கு வீதிகள் சங்கமிக்க அமைந்திருக்கும் அகில இலங்கைக்கம்பன் கழகக் கோட்டப் பெருவாயிலிலிருந்து, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாசார மண்டபம் வரை வாழைகமுகுடனான மகரதோரணங்களும், வளைவுகளும், பல்வர்ண மின் குமிழ் அலங்காரமும் காட்சி தருகின்றன. நல்லூர்க் கந்தனின் கண்டாமணி ஓசை, சரியாக 4.00க்குக் கணீரெனஒலிக்கக்கோட்ட வாயிலினின்று ஓர் ஊர்வலம் தொடங்குகிறது. ஊர்வலத்தின் முன்னணியில், சூரிய - சந்திர ஆலவட்டங்களும், குடை-சாமரை- கொடி- பதாகைகளும் வரிசை செய்ய; தமிழ்கூரும் நல்லுலகம் போற்றும் மேதைகளான நாதஸ்வர கலாநிதி என். கே பத்மநாதன், சாவகச்சேரி 'இசைப்பேரறிஞர்', கே.எம். பஞ்சாபிகேசன், இணுவையூர், கே. ஆர். சுந்தரமூர்த்தி கோண்டாவிலூர் வி கே. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள், அளவெட்டியூர், எஸ். சிதம்பரநாதன் என்போரின் மங்கள இசைபொழிய; சுமங்கல மாதர் குழாம் பூரண கும்பங்கள் ஏந்த; பள்ளி மாணவக்கன்னியர் நறுமலர்சொரிய; நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியர் அடிகளாரும், யாழ். மறை மாவட்ட ஆயர், அதிவண. கலாநிதி வ தியோகுப்பிள்ளை அவர்களும், வேதாகம வித்தகர் தா.மகாதேவாக் குருக்கள் அவர்களும், எழுத்தாளர்கள்- கவிஞர்கள் - கல்விமான்கள் - அறிஞர்கள் எனப் பல்லோரும் புடைசூழ, கவிச் சக்கரவர்த்தியாம் கம்ப நாடாழ்வாரின்திருவுருவப் பட ஊர்வலம் அடிமேல் அடி வைத்து பவனி வருகிறது. ஊர்வலம், ஆதீனக் கலாசார மண்டப வாயிலை அடைகிறது. அப்போது, கம்பன் கழக அமைப்பாளர்- 'தமிழரங்குக்கொண்டல்', திருமிகு இ.ஜெயராஜும், கழக உறுப்பினர்களும் பூரண கும்பத்துடன் முன் வந்து, வரவேற்று சமயாசாரியர்கள் - அறிஞர்கள் - கல்விமான்கள் என்போரது பாதங்களை நிறைகுடநீர் வார்த்து. மலரிட்டுப் பூசை செய்கிறார்கள். அது கண்டு, தமிழீழக் கம்பன் அடிப்பொடியின் செயற்றிறன் விஞ்சிய பக்திமை எம்மகத்தைக் குளிரச் செய்கிறது.

அதன் பின்னர் - அங்கு விசேடமாக மரபுதழுவி அலங்கரிக்கப் பெற்ற 'சொக்கொட்டான்' பந்தரின் மண்டபத்துக்குள் அறிஞர்களும், பார்வையாளர்களும் ஒழுங்காக அழைத்துச் செல்லப் பெற்று ஆசனங்களில் அமர்த்தப் பெறுகிறார்கள். அதே வேளையில்- ஊர்வலத்தில் வந்த கம்பனின் திருவுருவப் படமும், அரங்கின் ஒருபுறம் கொலுவேற்றப் பெறுகிறது. அதனைத் தொடர்ந்து கே. ஆர் சுந்தரமூர்த்தி குழுவினரின், ஏறக்குறைய ஒன்றரை மணித்தியால நாதஸ்வர கானமழை பொழிகிறது. கானவோசை ஓய, அவை கொள்ளாச் சனத்திரள் அமைதியாக நிற்க; யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம் மங்கள விளக்கேற்றி வைக்க; சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம் கடவுள் - தமிழ் வாழ்த்துகள் பாட; சிவத் தமிழ்ச்செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி அன்றைய விழாவின் அரியாசனத்தில் ஏறி அமர்கிறார். யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தொடக்கவுரை நிகழ்த்த யாழ். மறை ஆயரும் நல்லை ஆதீன முதல்வரும் வாழ்த்துரை வழங்கினர்.

சிவத்தமிழ்ச் செல்வி தனது தலைமை உரையின் போது கம்பன்கழக இளைஞர்களின் செயற்றிறன்களையும் ஆற்றல்களையும் வாழ்த்தியதோடு, அவர் தம் சிறப்புப் பணிகளையும் கோடிட்டு விதந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு மாலைப்பொழுதில் இரு தோழிகள்

சிறுகதை

பெரிய எழுத்தில் கடையின் பெயரும் அதன் கீழ் சிறியதாக 'நன்றி மீண்டும் வருக' என்ற அழைப்பும் அச்சிட்ட மஞ்சள் பிளாஸ்டிக் பை மேஜை மீதிருந்து அவளை மல்லாந்து பார்த்தது. அதன் கறுப்புக் கைப்பிடி இசைவாய் வளைந்து'ம்'. நான் ரெடி, தூக்கு என்னை. என்றது

ஹேமா தூக்கவில்லை கையில் பிடித்திருந்த 'பில்' லின் ரூபாய் 187.65 என்ற எண்களுக்கும் பேர்சிலிருந்த ரூபா 175 க்கும் சமத்துவம் தேடி அவள் கண்களும் கைகளும் பரபரத்துக் கொண்டிருந்தன. பேர்சில் நேற்று இருநூறு ரூபாய் எடுத்து வைத்ததாய் நினைவு அதைச். சரி பார்க்காமல் கடைக்கு வந்து விட்ட தன் விளைவு இது. பணக் குறைவைப் பார்க்கையில் தான் நேற்றிரவு அம்மா துவரம் பருப்பு வாங்கத் தன்னிடம் பணம் பெற்றுக் கொண்டது சுருக்கென்று நினைவு வந்து உள்ளங்கையில் வேர்வையாய்ப் பொழிந்தது. 'பில்' போட்ட துணிகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவும் மாட்டார்களே.

'மீண்டும்பரபரத்தாள்பணம் பத்தலைப்போலிருக்கே' என்று வேறுயாருடைய குறை பாட்டையோ சொல்லிக் கடைக்காரருடன் சேர்ந்து அலுத்துக் கொள்வது போன்ற தொனியில் முணுமுணுத்தாள்.

கடைக்காரர் பொறுமை இழந்து கொண்டிருந்தார். "என்னம்மா? பணம் கொண்டு வராமலா சேலை எடுத்தீங்க.''

கடைக்காரரின் நெற்றிநரம்புப் புடைப்பிலும், தாடை இறுக்கத்திலும் கோபம்வெடிக்கத் தயாராகிக் கொண்டிருந்த கணம்.

' நான் உதவலாமா?''

ஹேமா சடக் கென்று திரும்பிப்பார்த்தாள்.

துளசி.

கணநேர அதிர்ச்சி.

''இல்லே ......... வேணாம் தாங்ஸ்.''

''இதில் மறுக்கவோ கூச்சப்படவோ எதுவுமில்லை இன்னிக்கு என்கிட்ட வாங்கிக்கிட்டு நாளைக்கு திருப்பித்தரதில் என்ன தப்பு?''

''பரவாயில்லை உனக்கேன் சிரமம்...... ரொம்ப தாங்ஸ் ஆனா வேணாம்.''

அங்கிருந்து ஓடிவிட வேண்டும் போல் இருந்தது ஹேமாவிற்கு. இவள் எங்கே முளைத்தாள் திடீரென்று? இது என்ன சங்கடம்......பதற்ற மிகுதியில் மீண்டும் ஒருமுறை அர்த்தமில்லாமல் பேர்சைக்குடைந்தாள்.

''டேக் இட் ஈஸி. ஹேமா. இதுக்கு இத்தனை கலவரம் எதுக்கு? நீ எத்தனை வாட்டி பர்சைப் புரட்டினாலும் இல்லாத பணம் முளைச்சிடப் போறதில்லை. நான் உனக்கு தெரிஞ்சவள் தானே? பணம் பத்தாம கடையில நாலுபேர் முன்னால அலமந்து நிக்கறியே பாவம் எவ்வளவு குறையுது? சொல்லு''

வேறு வழியில்லை. ஹேமா சொன்னால் துளசி தன்தோள் பையின் ஜிப்பை இழுத்துத் திறந்தாள்.

''இந்த?''

ஹேமா அசையவில்லை. நெற்றி வேர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

''ஒண்ணும் தயங்காதே.இந்தச்சின்ன உதவிகள் ஒருத்தருக்கொருவர் செஞ்சுக்கக் கூடாதா.''?

கைமெல்ல நீண்டபோது தலையும் நிமிர்ந்தது பார்வையும் பிணைந்து விலகின.

''ரொம்ப தாங்ஸ் துளசி''

உதவி பெற்றுக் கொண்டதால் துளசி தனக்குச் சேலைகள் வாங்கிக் கொள்ள முன் விலகுவது மரியாதையாய்த் தோன்றவில்லை. ஹேமா காத்திருந்தாள். பிறகு இருவரும் ஒன்றாய்க் கடையிலிருந்து வெளிவந்தார்கள்.

''அப்போ நான் போயிட்டு ...'' என்று ஹேமா முடிக்கு முன் ''எப்படியிருக்கே ஹேமா''? என்றாள் துளசி கனிந்த குரலில்.

''ம்? ... நல்லாயிருக்கேன்... நீ?''

நானும் தான்''

''உன் வீட்டுக்காரர்? பையன்?''

''நல்லாயிருக் காங்க''

'உன் அண்ணன்?' என்று ஹேம கேட்கவில்லை, துளசிஎதிர்பார்த்திருப்பாளே? அப்படியிருந்தால் அவள் முட்டாள். ஆனால் அவளோடு பழக நேர்ந்திருந்த நான்கு ஆண்டுகளில் அவளை முட்டாள் என்று நினைக்கும் படியாக ஒருபோதும் இருந்ததில்லை.

'இப்போ எங்கே போறே?' என்றாள் துளசி வீட்டுக்குத் தான்ஆட்டோபிடிக்சுப் போயிடுவேன் வீடு போய்ச் சேர்ந்து சார்ஜ் கொடுக்கலாமில்ல வரட்டுமா? உன்பணத்தை நாளைக்கு மணியார்டரில் அனுப்பிடறேன்.''

''அதுக்கென்ன வீட்டுக்குத் தான் போறேன்னா ஒண்ணும் அவசர வேலை இல்லை, இல்லையா? இங்கே எங்கயானும் ஹோட்டலில் காபிகுடிச்சுட்டுப் போவமா?''

ஹேமா இதை எதிர்பார்க்கவில்லை. 'இவள் மனசில் என்ன இருக்கிறது?' என்பது போல் துளசியைக் கண்களால் ஊடுருவினாள்.

துளசி புன்னகை செய்தாள். ''மற்ற விஷயங்கள் எப்படி இருந்தாலும் நீயும் நானும்எப்பவும் சிநேகிதிகளாய்த்தான் பழகியிருக்கோம், இல்லையா ஹேமா?''

ஹேமாவுக்குள் ஏதோ நெகிழத் தொடங்குகையில் உறுதியாய்த் தன்னை மீண்டும் திடமாகிக் கொண்டாள் இப்படி நைச்சியமாய்ப் பேசி மறுபடியும் தன்னைப் பழையவற்றில் மாட்டி விட எண்ணுகிறாளா?

''போன மாசம் உன் கட்டுரையை ஒரு ஆங்கில சஞ்சிகையில் படிச்சேன் ஹேமா ராம ஜென்ம பூமி விஷயத்தை ஒரு இண்டி விஜூவல் அறிவு ஜீவிகண்ணோட்டத்தில் ரொம்ப ஆழமா| ஆராஞ்சு எழுதியிருந்தே. எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. இந்த ஹேமா நாகராஜனை எனக்குத் தெரியும்!'னு நாலுபேர் கட்ட பெருமையா சொல்லிக் காணும் போல இருந்தது.

தன் சந்தேகங்கள் அனைத்துக்கும் துளசி ஒருசேர பதிலளித்து விட்டதாய்' ஹேமா உணர்ந்தாள் அவள் கட்டுரையைப் புகழ்ந்ததன்மூலம் அவள் எழுத்தாளர்த் தகுதிக்கு அங்கீகாரம் 'ஹேமா நாகராஜன்' என்றதில் 'இது முறை தான் என்று ஏற்கும் குறிப்பு.

''தாங்ஸ் துளசி காபி குடிக்கலாம்னியே? ஆனா இப்போ என்கிட்ட பணம் இல்லைன்னு உனக்குத் தெரியும்!''

ஹேமா புன்னகை செய்யும் போது எத்தனை உயிரக்களையோடு இருந்தாள்! பதிலுக்கு ஒரு புன்சிரிப்புடன் ''நீ என் விருந்தாளி'' என்றாள் துளசி.

அவளும் துளசியும் இது என்ன ஜோடி? எத்தகைய உறவு? சகோதரிகளல்ல வேறு வித ரத்த உறவினர்களல்ல. சிநேகிதிகள் என்று துளசி சொன்னாலும் ஆரம்ப நாட்களிலிருந்து உருவான பள்ளி நட்போ கல்லூரித்தோழமையோ அல்ல. தாமோதரனை ஹேமா மணந்த போது ஏற்பட்ட உறவு பரிச்சயமோ நட்போ எல்லாமே அப்போதிலிருந்து தான் இப்போது? மாஜி அண்ணி - மாஜி நாத்தியா? ஹேமாவுக்குச் சிரிப்பு வந்தது. ''ஏன் சிரிக்கறே ஹேமா? ''இல்லே உனக்கும் எனக்கும் இப்போ என்ன உறவுன்னு நினைச்சுப் பார்த்தேன் சிரிப்பு வந்திடிச்சு''

★ ★ ★

''நட்புகூட ஒரு உறவு தான் ஹேமா ஏதோ ஒரு காரணத்தால் ரெண்டு பேர் பரிச்சயமான நாங்க அப்புறம்அவங்க தனிப்பட்ட முறையில் நண்பர்களாயிட்டா முதல் காரணம் மறைஞ்சு போய்ட்டால் கூட இந்த நட்பு நிலைக்க முடியும்.''

''ஆனா நீ என் கிட்ட ஒரு அன்னியத்தனம் உணராம இருக்க முடியுமா துளசி? உன் உன் அண்ணனுக்கும் எனக்குமிடையே நீ நடுநிலைமை பாராட்ட முடியுமா?''

''ஏன் முடியாது? தாமுஎன் அண்ணன் என்கிறதால் அவர் கிட்ட எனக்குள்ளது ரத்த பந்தம் அதேசமயம் உன்னோடும் எனக்கு ஒரு பந்தம் உண்டு ஹேமா. பார்க்கப் போனால் இன்னும் அடிப்படையான பந்தம்''

''எதைச் சொல்றே''

''நாம ரெண்டு பேரும் பெண்கள்'' ஹேமாவின் மனம் குளிர்ந்த பிறகுதான் வயிறும் குளிர ஐஸ்கிரீம் வந்தது. இருவரும் சாப்பிடத்தொடங்கினார்கள். ஒரு நுட்பமானநெருக்க உணர்வினால் அந்த சாதாரண ஜோடி செயலில் கூட ஓர் இதம் தெரிந்தது ஹேமாவுக்கு.

இரண்டு ஸ்பூன் அளவங்களுக்கிடையே துளசி கேட்டாள், ''இப்ப ஏதாவது ப்ராஜெக்ட் செய்து கிட்டிருக்கியா ஹேமா? ஸ்தலத்துக்குப் போய் நேரடி ரிப்போட் செய்யும்படி ஏதானும்சந்தர்ப்பம்வந்திருக்கா?''

''அந்த மாதிரி ரிப்போர்ட்டில் இல்லே சிறப்புப்பேட்டி ஒண்ணு இருக்குபிரதமர்வெளி நாட்டுப்பயணம் முடிச்சுக்கிட்டுத்திரும்பினதும் தில்லிக்குப் போய் அவரை அது பத்தி பேட்டிகண்டு எழுதணும்.''

''ரொம்ப சந்தோசம் ஹேமா நான் கட்டாயம் படிப்பேன் நீ வழக்கமா எழுதுற பேப்பர்லதானே பேட்டி வெளியாகும்?',

''ஆமாம் அதன் எடிட்டர் என்னை ஸ்டாஃபிலேயே சேர்ந்துடும்படி கேட்டிருக்கார் அநேகமாக இந்தப் பேட்டி வெளியாகிற சமயம் எனக்கு அங்கே ஸ்டாஃப்ல ஒரு முக்கிய இடம் இருக்கும்.

துளசி எட்டி அவள் கையைப் பற்றி அழுத்தினாள் முகம்ஒளிரக் கூறினால் ' கங்கிராஜுலேஷன்ஸ் ஹேமா! எனக்கு எத்தனை சந்தோசமாயிருக்கு தெரியுமா? ஒரு முக்கியமான முன்னணிப் பேப்பரில்உன்னை வலியக் கூப்பிட்டு நீ சேரப் போறேன்னா அது உன் அறிவுக்கும் திறமைக்கும்ரொம்பவும் தகும்.''

அரசியல்துறை முதுகலைப் பட்டம் பத்திரிகையியலில் டிப்ளோமா நாளிதழ்களிலும்சஞ்சிகைகளிலும் அவ்வப்போது கட்டுரை எழுதுபவள். பெண் பார்த்துவிட்டு வந்த அன்று இந்தத் தகுதிகள் மட்டுமே ஒரு பெருமையாய்த் தெரிய, அவளிடம் சுடர்விட்ட அறிவுக்களை வீசும் கம்பீரஅழகில் அழகை மட்டுமே கண்டு' எனக்குப் பெண்ணைப் பிடிச்சிருக்கம்மா இந்த இடத்தையே முடிச்சிடுங்க' என்று தாமோதரன் ஒன்பதாண்டுகள் முன்பு கூறியதை எண்ணிப் பார்த்துக் கொண்டாள் துளசி.

அண்ணனின் ஜாடை தெரியும் இந்த முகத்தில் இந்த ஒளி 'உன் அறிவுக்கும், திறமைக்கும் தகும்' எனும் சொற்கள், அவன் என்றாவது இதுபோல் உணர்ந்ததோ, பேசியதோ உண்டே? ஹேமவினுள் புரையோடிப் போன நினைவுகள் கசந்தன,

முதலிலெல்லாம் அச்சில் அவள் எழுத்துக்களைக் கண்டு பெருமைப்பட்டான், ஹேமா நாகராஜன் என்ற கன்னிப் பெயரை ஹேமா தாமோதரன் என்று மாற்றிக்கொண்டிருந்ததில் குறிப்பாகப்பெருமை உணர்ந்தான், நண்பர்கள் 'உன் மிஸஸ் இந்த வாரம் எழுதியிருக்காங்களே, கொன்னுட்டாங்கடா தாமு' என்று புகழ்ந்தபோது இறுமாப்புக் கொண்டான். வீட்டுக்கு வந்தவர்கள் 'மிஸஸ் தாமோதரன் பிரமாதப்படுத்திட்டீங்க உங்க எழுத்தில் ஒரு தனி சக்தி இருக்கு' என்று பாராட்டிய போது மகிழ்ச்சி அடைந்தான், பிறகு சிறிது சிறிதாய் மகிழ்ச்சி குறைந்தது. 'எதுக்குப் பாராட்டறாங்க, தடிப் பசங்க?' என்றான், எழுத்துத்துறை நண்பர்களோ, யாரேனும் பத்திரிகையாசிரியரோ அவளுக்கு டெலிபோன் செய்தால் 'வளவளவென்று எத்தனை நேரம் பேசுவே? வை போனை' என்று எரிந்து விழுந்தான், டைப் அடித்துக் கொண்டிருந்தாளானால் 'இந்த வீட்ல எப்பபார்த்தாலும் படபடன்னு சத்தம் தான். சே, மனுஷனுக்குத் துளியவது அமைதி உண்டா? உடனே நிறுத்து அந்தச் சனியனை' என்றான், அதற்குப் பயந்து பேனாவும் காகிதமுமாய் எப்போதாவது

## ஆர். சூடாமணி

இரவு எழுத வில் உட்கார்ந்தால் ''என்ன, பர்னிங் தி மிட்நட் ஆயிலா? பெரிய இன்டலெக்சுவல்னு எண்ணமாக்கும். உடனே விளக்கை அணைச்சிட்டு இங்கே வா.புருஷனுக்கு செய்யவேண்டிய கடமைகளும் இருக்குன்னு நினைப்பிருக்கா இல்லையா?'' என்று படுக்கையிலிருந்து கத்தினான். ''நான் என் எழுத்துக்காக எந்த கடமையைவிட்டேன்?'' என்றாள் எதிர்த்துப் பேசறியா?பின்னே இருக்காதா? பெரிய ஃப்ரீலான்ஸ் ஜர்னலிஸ்டாச்சே?'' என்றான். ''அது தெரிஞ்சுதானே கட்டிக்கிட்டீங்க?'' என்று ஒரு நாள் அவள் திருப்பிக் கேட்ட போது பிறகு நாலு நாள் அவளுடன் பேசாமல் கோபித்திருந்தான்.

அவனும் பெரிய அதிகாரி தான். தனியார் நிறுவனம் ஒன்றில் பொதுமேலாளர். நல்ல பெயர், வருமானம், அந்தஸ்து எனினும் மற்றவர்கள் நினைத்து நினைத்துப் புகழும் ஒரு துறையினால் அவள் தன்னைப் பின்னுக்கு தள்ளிவிட்டுப் பிரகாசிக்கிறாள் என்ற குமைச்சல் உள்ளேயே புழுங்கியிருக்க வேண்டும். நான்காண்டு தாம்பத்தியத்துக்குப்பிறகு ஒரு நாள்- சேலத்தில் அருகில் ஒரு கிராமத்துக்குச் சென்று அங்கு நிகழ்ந்த இனக்கலவரச் சம்பவம் ஒன்றில் பாதிக்கப்பட்ட சிலரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து தன் 'இம்ப்ரெஷன்' களை ஒரு கட்டுரையாக எழுதித்தர முடியுமா என்று ஒரு வாராந்திரி ஆசிரியர் கேட்ட தினம்- அந்தக் குமைச்சல் வெடித்துக் கொண்டு வெளி வந்தது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

# "என் தேசமே"

என் இனிய தேசமே!
குறிப்பெடுத்துக் கொள்.

எரியுண்டு
சிதையுண்டு போன
என் தேசத்தின்
காப்பகழி ஒன்றில்
எழுகின்ற
உணர்வு அலைகளை
குறிப்பெடுத்துக் கொள்.

இந்த தேசத்தை
எப்படி நான்
நேசித்தேன் என்று
தெரியுமா உனக்கு ?

என் தலைமையை
எப்படி நான்
தெரிந்தெடுத்தேன் என்று
தெரியுமா உனக்கு ?

கீழ்வானம் எமக்கு
எப்போது சிவக்கும்?
என் இதயத்தின் துடிப்பிது
கேட்கிறதா உனக்கு ?

என்னால்
விளங்கப்படுத்த முடியவில்லை
ஆனாலும்
என் தேசமே
குறிப்பெடுத்துக் கொள்

இன்னும்
என்
அம்மா என்ற பெயரில்
உயிரோடு உலாவும்
எலும்புக் கூட்டை
நீ
கண்டிருக்கிறாயா ?
ஆம் ! கண்டிருப்பாய்
நடைப்பிணமாய் திரியும்
'அதன்' கால்கள்
நிச்சயம்
உன் மடியில்
பதிந்திருக்கும்

வாழ்வின்
பற்றுக் கோட்டினை
தேடி அலையும்
இந்த எலும்புக் கூடு
தினம் தினம்
என் நினைவில்
வந்து போனாலும்
இன்னும் எதன் மீது
அன்பு செலுத்துகிறேன்
தெரியுமா உனக்கு ?

தெரிந்து கொள்]
உன் மீது தான்
இருண்டு போயிருக்கும்
என் தேசத்தில்
ஏற்றப்படும்
விடுதலைத் தீபத்திற்கு
என் உயிரும்
எண்ணெயாய்
ஊற்றப்பட வேண்டும்

குறிப்பெடுத்துக் கொள்
என் தேசமே
குறிப்பெடுத்துக் கொள்!
- விடிவெள்ளி

# கலைஞர்களால் நாடு வளம் பெறும்; மண்ணினால் கலைஞர்களும் சுகம்பெறுவர்



தமிழ் ஈழத்தின் புகழ் பெற்ற கவிஞர் புதுவை இரத்தினதுரை. சிறந்த சிற்பிகளிலும் ஒருவர் தற்போது விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளராக இருக்கிறார். ஒருதோழனின் காதல் கடிதம், இரத்தபுஷ்பங்கள் என்ற தலைப்பில் இவரது இரண்டு கவிதைத் தொகுப்புகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன.

கேள்வி:

நீங்கள் ஒரு போராளியாகவும், கவிஞராகவும், நிர்வாகஸ்தராகவும் இருக்கிறீர்கள். எப்படி இந்த மூன்று நிலைகளும் இணைய முடிந்தது. இதில் முதல் தோன்றியவர் யார்?

பதில்:

ஆரம்பத்தில் எனது உலகம் கவிதை உலகம். எப்போதும் சரியான பக்கம் என்னை இனம் காட்டியுள்ளேன். உண்மை வாழ்க்கையுடன் நான் உறவாடியதால் அடக்கப்பட்ட மக்களின் அனுபவத்தையும், வேதனையையும் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. மரபார்ந்த அடக்கு முறைகளுக்கு எதிராகக் கவிதை எழுதத் தூண்டியது. ஆரம்ப காலத்திலிருந்து அடக்குமுறை நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் இறுகிய பிணைப்பு இருந்ததால், போராட்டத்துடன் என்னை ஈடுபடுத்திக் கொண்டு போராளியாக மாற முடிந்தது என்று சொல்லலாம். இந்த இரு நிலைகளையும் உணர்ந்து கொண்டதால் போலும் இப்போது நான் வகிக்கும் பொறுப்பை எனக்குக் கொடுந்தார்கள். இதில் முனைப்பாக நிற்பது போராளிதான். இதற்குள் மற்ற இரண்டும் அடங்கும்.

கேள்வி:

கவிதை எழுதுவதில் முக்கியமானது உத்தியா அல்லது உந்தலா? அல்லது சமகாலத்தில் இரண்டும் முக்கியமானதா?

பதில்:

என்னைப் பொறுத்த வரையில் உத்தியைவிட உந்தல்தான் முக்கியமானது. சம்பவம் அல்லது நிகழ்வு பாதித்தவுடன் அதனால் ஏற்படும் விளைவையும், அனுபவத்தையும் மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்ற அவா என்னைக் கவிதை எழுதத் தூண்டுகிறது என்னைப் பொறுத்த வரையில் உந்தல்தான் முதன்மையாகிறது உத்தி பிறகுதான். எழுதப் போகிறோம் என்று கணக்கிலெடுத்துக் கொண்டு போய் இருப்பதில்லை. அனுபவத்தின் அடையாளத்தைப் பதியச் செய்ய வேண்டும்—சொல்லி விட வேண்டும் என்ற உந்தலில் எழுத ஆரம்பிக்கிறேன்.

கேள்வி:

எழுதுவதற்கு அமைதியை விரும்புகிறீர்களா அல்லது உங்கள் அலுவலகச் சூழலில் எழுத விரும்புகிறீர்களா?

பதில்:

உண்மையில் கவிதை எழுதுவதற்கு அமைதி பொருத்தமான சூழ்நிலை என்றுதான் கருதுகிறேன். இன்று எழுதுவது என்பது சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்திருக்கிறது. இப்போது நான் பாடல்களையோ கவிதைகளையோ முடிந்தபோதெல்லாம் தேவை கருதி எழுதுகின்றேன். எழுதுவது தேவை கருதி நிர்ணயிக்கப்படுகிறது. அமைதியை நாடிப் போனால் அந்தத் தேவை இல்லாது போய் விடுகிறது. இன்று நான் தேவை கருதி எழுத வேண்டிய அழுத்தத்துக்கு உள்ளாகியிருக்கிறேன். ஒரு நல்ல கவிஞனிடம் ஏலவே ஒரு எண்ணக்கரு இருக்கும். ஒரு மேதளம் அடைந்த கவிஞனாலும் இன்றைய நிலையில் ஆழ்ந்த ஈடுபாடுடையவனாயும் தேவை கருதித் திறப்படக் கவிதைகளைப் படைக்க முடியும். ஆனால் அமைதி வாய்க்கப் பெறும் நேரத்தில் எழுதப்படும் கவிதைகள் அழகாக அமைவது உண்மைதான்.

கேள்வி:

நீங்கள் ஒலிப்பதிவு நாடாவுக்காகவும் பாடியிருப்பதாக அறிகிறேன். கேட்க வேண்டிய பாடலும், படித்து மகிழ வேண்டிய பாடலும் எழுத வேண்டிய முறையில் மாறுபடுகின்றனவா? ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்வதற்கென எழுதப்படும் படைப்புகளில் இலக்கிய அலங்காரங்களுக்கு இடமுண்டா?

பதில்:

கவிதையைப் பற்றிப் பேசும் போது அதன் தனித்தன்மையை மனதில் வைத்துப் பேசவேண்டும். கவிதைகள் பாடலாக இசைத்திடக்கேட்டு மகிழும் கருவி அல்ல. ஆனால் பாடல்கள் செவிப்புலனுக்குரியது. பாடல்களை உணர, அனுபவிக்கச் செவிப்புலன்தான் வழி கவிதை கட்புலனுக்குரியது. கவிதை படைப்பவரின் கவிதை. மொழியின் எல்லைகளை கட்புலனளவில் அணுகும் போது இதனை உணரலாம். இதுதான் கவிதையின் சக்தியும் கூட எனலாம்.

தமிழ் நாட்டில், தமிழ்நாட்டுப் பின்னணிப் பாடகர்களுடனும், இசையமைப்பாளர்களுடனும் பரிச்சயம் எனக்கு வாய்த்தது. அந்த அனுபவம் ஆழமானதொன்றாக அமைந்து விட்டது இந்தப் பகைப் புலத்தில் பாடல்களை எழுதி உருவாக்கி ஒலிப்பதிவு நாடாவில் வெளியிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

எழுதிய பாடல்களுக்கு (LYRICS) இசையமைக்கும் பழக்கமும், இசைக்கு பாட்டெழுதும் வழக்கமுமாக இரு வகைகள் உள்ளன. உதாரணமாக எமது இயக்கம் வெளியிட்ட களத்தில் கேட்கும் கானங்கள் என்ற நாடாவில் பதிக்கப்பட்டிருக்கும் 'காற்றும் ஒரு கணம் வீச மறந்தது' எனக்கு ஒரு சோதனைக் களமாகவே அமைந்தது. இது தவிர ஏனைய பாடல்களுக்கு இசையமைப்பாளர் தெய்வேந்திரன் இசையமைத்தார். அடிக்கோடிட்டுக் காண்பிப்பது போல இசையைத்தந்து, அந்த இசைக்கு அமைவாக வார்த்தைகளைப் 'போட்டு'த் தரும் படி கேட்டார். கவிதைக்கும் காதால் கேட்க வேண்டிய பாடலுக்கும் எவ்வளவு வித்தியாசம் அந்த இசைப்படி மங்களுக்குத் தாங்கலாக எழுதிய பாடல் 'காற்றும் ஒரு கணம் வீச மறந்தது', விற்பன்னர்களினால் ஒரே முறையில் செய்ய முடியாததை, ஒரு தரத்தில் செய்ய உங்களால் எப்படி முடிந்தது?' என்று ஆச்சரியப்பட்டார்.

கவிதையைப் பார்க்க பாடலில் இலக்கிய நயம் (இலக்கிய அலங்காரம்) எளிமையாயிருப்பதைப் பார்க்கலாம். இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த நிலையில்

'இங்கு குயிலினம் பாட மறந்தது எங்கள் வயல் வெளி ஆடையிழந்தது'- இந்தப் பாடலைப் பாடியவர் வாணி ஜெயராம். அவர், 'என்னுடைய முதல் பாடல் மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ என்ற பாடலைப் பாடிவிட்டுத் தூக்கமில்லாமல் இருந்தேன். உங்கள் இந்தப் பாடலையும் பாடிவிட்டும் தூக்கமில்லாது இருந்தேன்' என்றார். இவரது இக்கூற்று எனது பாடல்களிலிருந்து இலக்கிய மணம் மற்றும் இலக்கிய அலங்காரத்தின் தாக்கத்தையே குறிப்பிடுகின்றது

அண்ணன் காசி ஆனந்தன் 'அடைக்கலம் தந்த வீடுகளே' என்ற பாடலில் வருகின்ற ஒவ்வொரு அடியும், பாட்டின் ஓட்டமும் உணர்வை இலக்கிய அலங்காரங்களுடன் வெளிப்படுத்துகின்றன. இங்குலாப்பின் பாடலில் வருகின்ற 'ஏழு கடல்களும் பாடட்டும்; இதை எட்டாத வானமும் கேட்கட்டும்' என்ற பாடலில் இலக்கிய அலங்காரங்களுக்கு என்ன குறைவு?

கேள்வி:

இலக்கிய ஆய்வரங்கங்களில் திரைப்படப் பாட்டுக்களைப் பற்றிப் பேசப்படுவதில்லை. தமிழ் இசை, மற்றும் கவிதை பற்றிய நூல்களிலும் கூட சினிமா இசை மற்றும் சினிமாப் பாடல்கள் பற்றி ஒன்றும் இருக்காது ஏன்?

பதில்:

தொழில் நுட்பத் துறையில் அவ்வப்போது ஏற்பட்ட வளர்ச்சி சினிமாப் பாட்டின் பரிணாமத்தை வரையறை செய்கிறது. உண்மையில் கவிதை மக்களைச் சென்றடைவதை விடச் சினிமாப் பாடல்கள் மக்களை வெகு விரைவில் சென்றடைகிறது இன்றைய தமிழ் நாட்டுக்கலாசார சூழ்நிலையில் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்தும், இரசிகர்களால ஏற்கப்படும் துல்லியமான இசையும் சேர்ந்துதான் இசைப்பாடல்கள் ஆகின்றன. ஆனல் சினிமாப் பாடல்களில் பல இழைகளாகப் பின்னியிருக்கும் கருத்தைத்தமக்கு ஏற்புடையது என்று விதந்துரைத்தால் தம்மைக் குறைவாக மதித்து விடுவார்களோ என்ற அச்சத்தினால்தான் சிலர் சினிமாப் பாடல்களின் மூலம் அளிக்கப்படும் கருத்துக்களைக் காத்திரமாக ஏற்றுக் கொள்வதில்லை. எமது இயக்கப் பாடல்களில் கலந்திருக்கும் இசையும் கருத்தும் பயன்படுத்தப்படும் மெட்டுகளும் சினிமாவுக்குப் புறம்பான ஒரு தனிப்பட்ட அம்சமாக வளர்த்து விட்டதால் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்களில் துல்லியமாக நாட்டுப்புற இசையும் அர்த்தமும் இருப்பதால் அதையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

> இன்றைய தலைமுறைக்கு பட்டறிவும் தொட்டறிவும் உள்ளன. அதனால் போராட்டத்தைப் பற்றி அவர்களால் எழுதமுடிகிறது.

கேள்வி:

இன்றைய சரித்திர நிர்ப்பந்த காலகட்டத்தில் பரத நாட்டியம், சிற்பம், சித்திரம் போன்ற அழகியல் துறைகள் பழைமை மாற்றப்படாதவையாக இன்றும் உள்ளன. மீறல் சுயதரிசனம், MODERN SENSIBLITY என்பதே காணப்படுவதில்லை என்ற கருத்துச் சரியா?

நாட்டியத்துறையில் பரத நாட்டியம் என்ற மொழியின் வாயிலாக கலைஞர் என்ற தகுதி பெற்றவர்கள் சமகால நிகழ்வுகளை அல்லது ஒரு உலகப் பார்வையை வெளிப்படுத்தவில்லை என்பதை நான் உணர்கிறேன். இப்பொழுதும் சிற்பமும், சித்திரமும் ஒரு வருமானத்துக்குரிய தொழிலாகவே இருக்கிறது கோயிலுக்கு அல்லது ஒரு தேவை கருதிச் செய்யும் பணியாகவே இருக்கிறது. இதற்கு இன்றைய சமூகத்தின் மனோபாவத்தையும் நாம் மனதில் ஏற்றுக் கொள்ள வேண்டும் சிற்பம், சித்திரம் போன்ற கலைகளை முழுக்க முழுக்க தூண்டுதல் தரும் கலைகளாக (Evocative art) ஏற்றுக்கொண்டால் வாழக் கூடிய வருமானம் இல்லாத நிலை ஏற்படலாம் ஆகவே எல்லையை மீற முடியாமல் தத்தளிக்கிற ஒரு நிலை ஆனால், எல்லையை மீறிப் போகிற சிற்பக்காரர்களும், ஓவியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். சாதாரண மனிதர்களின் சாதாரணச் செயல்கள், மண்சார்ந்த புதிய உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஓவியங்களும், சிற்பங்களும் உருவாகி வருகின்றன. எல்லையை மீறிய ஒரு சமூகப் பார்வையைப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் பரதம் மௌனமான வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

கேள்வி·

இன்றைய தமிழ் ஈழ சமூக-கலாசார சூழலில் ஏற்பட்டுள்ள பாதிப்பின் பின்னணியில் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்காத வகையில் சில மூத்த கலைஞர்கள் ஒதுங்கிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது இது குறித்து உங்கள் அபிப்பிராயம்?

பதில்:

படைப்பாளிகள் அழகைப் பார்த்து 'குறிக்க'வும் வேண்டும். அனியாயத்தைப் பார்த்துக் 'கொதிக்க'வும் வேண்டும். வாழ்ந்து கொண்டிருக்கிற பல மூத்த எழுத்தாளர்கள் அழகைப் பார்த்துக் குதித்ததுடன் நின்று விடுகிறார்கள் சிலர் பிறர் ஈனநிலையைக் கண்டு கொதிக்க வேண்டிய படைப்பாளிக்குரிய பிரக்ஞையுள் புதிய சுயதரிசனங்களைத்தந்து விடுகின்றனர்.

நான் நினைக்கிறேன்-நான் பெற்றுக்கொண்ட காதல் அனுபவம், சுயசம்பவங்களை வைத்துக்கொண்டு அந்நியத்தன்மை வாய்ந்த உணர்வுகளைக் கைவிட்டு மண்சார்ந்த பாடுபொருளை எனது கவிதைகளில் வடிக்க முடிந்தது.

> எழுதுவது தேவை கருதி நிர்ணயிக்கப் படுகிறது. இன்று நான் தேவை கருதி எழுத வேண்டிய அழுத்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றேன்.

மேலும் போராட்டத்தைப் பற்றிப் பாடுவதற்குப் போராட்டத்தைப் பற்றிய பட்டறிவும் இருக்க வேண்டும் பட்டறிவு இல்லாதவர்கள் போராட்டத்தில் தமதுபேனாவைநனைத்து தமது பலவீனத்தை வெளிப்படுத்தாமல் அதைத்தொடாமலிருக்கிறார்கள். இன்றைய தலைமுறைக்கு தொட்டறிவும் பட்டறிதம் உள்ளன. அதனால் தான் இளைய தலைமுறையினரால் போராட்டத்தைப் பற்றி எழுத முடிகிறது.

கேள்வி:

தமிழ்க் கவிதையின் ஆதார சுருதியாக இருப்பவைகள் மூன்று விஷயங்கள் - காதல் (Romantic Love), வீரம் (Heroic War) இயற்கை- இந்த மூன்றையும் மீறிய உண்மை வாழ்க்கையைத் தொட ஈழத்துக் கவிஞர்கள் முயன்றது மிக அரிது. ஏன்?

பதில்:

1966 க்கு முந்திய ஈழத்துக் கவிதைகளைப் பொறுத்த வரையில் இந்தக்கேள்வி பொருந்தும் அதற்குப் பிறகு மேற்சொன்ன எல்லைகளையும் மீறியும் ஈழத்துக் கவிதை போயிருக்கிறது. மகாகவி காலம் என்று குறிப்பிடுகிற காலத்துக்குப் பிந்தியவர்கள் மீறல்களைச் செய்திருக்கின்றனர். காசி ஆனந்தன் ஒலுவில் மூர்த்தி, நுஃமான், சண்முகம், சிவலிங்கம் போன்றோர்களையும் அவர்களை அடிபொற்றி வந்தவர்களையும் குறிப்பிடலாம். இவர்களின் கவிதைகள் சமகாலச் சமூகப் பிரச்சினைகளைத் தொடுகின்றன.

மற்றப்படி, எங்களுடைய போராட்டத்தை முன்நிறுத்தி போராளிகளை உருவாக்கும் போராளிகளாகவே கவிஞர்கள் சிலர் இருக்கிறார்கள். இதில் விசேஷம் என்னவென்றால், இந்தியப்படை எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த

(7 ஆம் பக்கம் பார்க்க)

பேட்டி கண்டவர்: மதன

# தமிழீழத்தில் கம்பனுக்கு

இதனையடுத்து அன்றைய சிறப்பு நிகழ்வான பட்டிமன்றம் ஆசிரியர் க. சிவராமலிங்கம் நடுவராக வீற்றிருக்க ''மனப்போராட்டம் நிறைந்த யதார்த்த மாநுடம், பெரிதும் வெளிப்படுவது - கம்பனின் இலக்குவனிலேயே! கைகேயிலேயே! கும்பகர்ணனிலேயே'' என்ற பொருளில் மூன்று அணியினர் கருத்துரை வழங்கி வாதிட்டனர். இலக்குமணன் அணியில் திரு. இரா. செல்வவடிவேலும் திரு. ஆ. ஸ்ரீமுருகனும்; கைகேயி அணியில் திரு. க. நாகேஸ்வரனும் திரு. த. சிவகுமாரும்; கும்பகர்ணன் அணியில் திரு. சி. சிவலிங்கராஜா, திரு. தி. திருநந்தகுமாரும் அணி நின்று வாதிட்டனர். முப்பத்தேழு பேரைக் கொண்ட நோக்குநர் குழுவொன்று இவ்வணியினரின் விவாதத் திறமைகளையும், விடய விளக்கத்தெளிவையும் அவதானித்து ஓர் அணியை விலக்கும் பணியில் ஈடுபட்டது. பட்டி மன்ற நடவடிக்கைகளைப் பதிவு செய்பவராக கவிஞர் கல்வயல் வே. குமாரசாமிகடமையாற்றினார். நோக்குநர் குழுத் தலைவராக அநு.வை. நாகராஜன் கடமை புரிந்தார். நோக்குநர் குழுவின் தீர்ப்பு இரகசிய வாக்குப்பதிவால் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி கைகேயி அணி விலக்கப்பட்டது. நடுவரின் தீர்ப்புப்படி இலக்குவன் அணி விலக்கப்பட அன்றைய பட்டி மன்றத்தில் கும்பகர்ணன்அணி வெற்றி பெற்றது நோக்குநர் குழுவினதும், நடுவரினதும் தீர்ப்புகளை எதிர்த்து மேன் முறையீடு செய்யவும் அனுமதிக்கப்பட்டது. அத்துடன் அன்றைய முதல் நாள் நிகழ்வுகள் நிறைவெய்தின. மறுநாள் - கம்பன் விழாவின் 2-ம் நாள் நிகழ்வுகளின் முதற்கட்ட நிகழ்வுகள் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில்காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகியது. சங்கீத பூஷணம் ஐ வேலாயுதபிள்ளை கடவுள்-தமிழ் வாழ்த்துப் பாடல்களைப் பாட மருதனாமடம் இராமநாதன் கல்லூரி முன்னைநாள் அதிபர் இராசரத்தினம் மங்கள விளக்கேற்ற யாழ் கல்விக்கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி, வேலாயுதம் தொடக்கவுரை நிகழ்த்த யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தலைமைப்பீடம் ஏறினார்.

அன்றைய சிறப்பு நிகழ்வாக ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கில், மாவிட்டபுரம் தமிழறிஞரும் கவிஞருமான பண்டிதர் க. சச்சிதானந்தம் தமிழ்க்கவிதை மரபில் கம்பனின் தனித்துவம் எனும் பொருளிலும், திரு. சொக்கன் கம்ப காவியக் கட்டமைப்பு - திருப்புமுனை எனும் பொருளிலும் ஆய்வுரைகள் நிகழ்த்தினார்கள். பண்டிதர் சச்சியின் ஆய்வுரை மேனாட்டு இலக்கியத்திறனாய்வு நோக்கில் பல எடுகோள்கள் முன்வைக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் கம்பனின் கவித்துவத் தொனிப் பொருளை மிகவும் ஆழமாகவும் கனதியாகவும் துல்லியமாகவும் இழையோடுவதை பல சான்றுகளுடன் எடுத்துக் காட்டி அவையோரின் சிந்தனையைத் தூண்டினார். இவரது கருத்துகள் பல மிகவும் புதுமையாகவும், ஆணித்தரமாகவும் இருந்தன. இக் கருத்துகள் வெறும் உரையோடு நின்று விடாது நூலுருவிலும் வெளிவந்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்ற கருத்து பலருடைய மனங்களில் நிழலாடின. இதன் வெளிப்பாட்டை கம்பன் கழக அமைப்பாளரும் ஏற்று தனது குறிப்புரை யொன்றிற் கூறிய தோடு அதற்குச் செயலுருவம் தரவிருப்பதாகவும் கூறினார்.

மாலை நிகழ்வுகள் குறித்த நேரப்படி மாலை 4 30 க்கு ஆதீனக் கலாசார மண்டபத்தில் நாதஸ்வர இசைப் பேரறிஞர் கே. எம். பஞ்சாபிகேசன், அளவையூர் எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் தொடங்கியது. இதனையடுத்து, சங்கீத பூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர் கடவுள் - தமிழ் வாழ்த்துப் பாடல்களைப் பாட, கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமை வகித்தார். கவிஞர், தனது தலைமையுரையை கவிதை மாலையாக அவையோர் உள்ளங்களை அரவணைத்து சமகால நினைவுகளை இழையோடவிட்டு. மெய்சிலிர்க்க வைத்தார் அவரது ஒவ்வொரு கவித்துளியும் பல்லாயிரம் செய்திகளை அவையோர் அகத்திற் பாய்ச்சியது. யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்தினார். இதனையடுத்து, கவிஞர் இ. முருகையன் தலைமையில் ''தந்திரத்தால் கம்பனின் தனியெழுத்தில் தலைப்பெடுத்து, அந்தரங்கம் சொல்வோம்'' எனும் பொருளில் ச. வே பஞ்சாட்சரம், கல்வயல் வே. குமாரசாமி, ஜெ. சி. ஜெயசீலன், பண்டிதர் வீ. பரந்தாமன், நாக. சிவசிதம்பரம் நாவண்ணன்; காரை செ. சுந்தரம்பிள்ளை பா.சத்தியசீலன் சோ.பத்மநாதன் ஆகிய கவிஞர்கள் முறையே 'நா', 'வா' 'வு', 'ரு', 'ம', 'ளை', 'ல', 'ம்', 'ழ்', எனும் ஒன்பது சொல் கொண்டு சுவையான கவியரங்கு நடைபெற்றது. இக்கவியரங்கு, அவையோரின் மனதில் நன்முத்திரைகளைப் பதித்ததோடு, அரங்கில் கவிஞர்கள் எடுத்தாண்ட பதங்கள் மூலம் 'நாளை வாழ்வு மலரும்' என்ற நம்பிக்கையான செய்தியையும் எடுத்துச் சென்ற புதுமை மிகவும் போற்றுதற்குரியதாம். மூன்றாம் நாளின் முதலாங் கட்ட நிகழ்வுகள் நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9.30 மணிக்குஆரம்பமாகியது. கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை மங்களவிளக்கேற்றி வைக்க சங்கீதபூஷண பண்ணிசைச் செல்வன் நா.வி.மு நவரத்தினம் கடவுள்- தமிழ் வாழ்த்துப் பாடல்கள் பாட யாழ். பல்கலைக்கழக நூலகர் திரு.சி.முருகவேள் தொடக்கவுரை நிகழ்த்த யாழ்பல்கலைக் கழகத்தமிழ்த்துறைத்தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரம் விழாவுக்குத்தலைமை வகித்தார்.

அன்றைய சிறப்பு நிகழ்வுகளில் ஒன்றான வழக்காடு மன்றம் திரு. ஜெயராஜ் நீதிபதியாக வீற்றிருக்க 'வாலிவதை நீதிக்குப் புறம்பானது'' என்ற பொருளில் நிகழ்ந்தது. வழக்குத் தொடருநர் அணியில் காரை செ. சுந்தரம் பிள்ளை, சி. சிவலிங்கராஜா. த. சிவகுமாரன் என்போரும் எதிர்வழக்காடுவோராக திரு. சோ, பத்மநாதன், க. நாகேஸ்வரன், இரா. செல்வவடிவேல் என்போரும் கலந்து கருத்துப் பரிமாறல்கள் செய்தனர். இரு பக்கத்து அணியினரும் தமது கருத்துகளை எதிரும் புதிருமாக எடுத்தியம்பினர். ஈற்றில் நீதிபதியின் தீர்ப்பின்படி குறித்த வழக்கு சட்டத்துக்கு அப்பாற்பட்டு இருப்பதாகவும். இதற்கான புதிய சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும்வரை இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. மாலை நிகழ்வுகள் கோண்டாவிலூர் வீ. கே. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்களின் மங்கள இசையுடன் நல்லைஆதீன கலாசாரமண்டபத்தில்தொடங்கியது கடவுள்-தமிழ் வாழ்த்துப் பாடல்களை சங்கீதபூஷணம் எல். திலகநாயகம் போல் பாட பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் தொடக்கவுரை நிகழ்த்த குழந்தை ம. சண்முகலிங்கம் தலைமை வகித்தார்.

மாலை நிகழ்வின் முக்கிய இடம் வகித்த இளைஞர் கருத்தரங்கு நடைபெற்றது. இதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் தலைமை வகிக்க, செல்வன்கள் டி. நிசங்க, ஸ்ரீ. பிரசாந்தன், பா. சபேசன், வே. ஜெகரூபன், செல்விகள் க. பாமா, த. நாமகள் என்போருடன் திரு ஆ. ஸ்ரீ. முருகனும் பங்குபற்றி ''காகுத்தன் பெருமைக்குக் கை கொடுத்தோர்'' என்ற பொருளில் அநுமன், ஜடாயு. குகன், சபரி போன்ற பாத்திரங்கள் பற்றிக் கருத்துரை வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து. 'இவர்கள் இன்று சந்தித்தால்' என்ற புதுமையான தலைப்பில், இராவணன்-விபீஷணன் - வசிஷ்டர் - விஸ்வாமித்ரர் - கும்பகர்ணன்- மாரீசன் - வாலி சுக்கிரீவன், இலக்குவன் - சூர்ப்பனகை ஆகிய சோடிப் பாத்திரங்களாக முறையே, சி. கணபதிப்பிள்ளை-இ. சிவானந்தன், இ. முருகையன் - வே. குமாரசாமி, எஸ். கணபதிப்பிள்ளை (சின்னமணி) - எஸ் ரி. அரசு, காரை செ. சுந்தரம்பிள்ளை- சோ. பத்மநாதன், த. கலாமணி - சி சிவலிங்கராஜா என்போர் வேடம் பூண்டு நடித்து நாடக அரங்கைக் கலைமெருகுடன் களை கட்டச் செய்தனர். இவ்வரங்கை, கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நெறிப்படுத்தினார்.

இப்பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகளின் முதற்கட்ட நிகழ்ச்சிகள் நாவலர் கலாசார மண்டபத்தில் வழமைபோல் காலை 9. 30 க்குத் தொடங்கியது. கடவுள் - தமிழ் வாழ்த்தை சங்கீதபூஷணம் சி. கணபதிப்பிள்ளை பாட யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தொடக்கவுரை நிகழ்த்த, யாழ். பல்கலைக்கழக கிறீத்துவ மறைப்பிரிவு விரிவுரையாளர் வண. கலாநிதி ஏ.ஜே வி. சந்திரகாந்தன் தலைமையுரை வழங்கினார் கலாநிதி சந்திரகாந்தன் அடிகளார் தனது உரையின்போது ''கம்பன் காவியம் மாநுடம் தழுவிய தெய்வீகக் காவியம் இங்கு மாநுடத்தின் பலம் பலவீனம் சிறப்பித்துக் கூறப்படுகிறது. அதனூடே மாநுட நேயம்- பற்று- பாசம் பிரிவுத்துயர் போன்ற இலௌகீகங்களும் இழையோட விடப்பட்டிருக்கின்றன. ஈற்றில், தெய்வீகமே வெல்லும் என்னும் உயரிய சால்பும் சுட்டப்படுகிறது இதனாலேயே, கம்பராமாயணம் இன்றும் வாழ்கிறது. தமிழ் மாநுடம் வாழும் வரை கம்பனின் காவியம் வாழும்'' என்றார்.

அன்றைய சிறப்பு நிகழ்வான கருத்தரங்கு இலக்கண வித்தகர் இ நமசிவாய தேசிகர் தலைமையில் ''கம்பனின் குறள் விளக்கம்'' எனும் பொருளில் ''எந்நன்றி கொன்றார்க்கும்... என்ற தொடரில் 'சொக்கனும்'; ''தகுதி எனவொன்று நன்றே...... என்ற தொடரில் ஆசிரியர் க. சிவராமலிங்கமும்; ''பேராண்மை யென்பது தறுகண்...'' எனும் தொடரில் திரு. ச. விநாயகமூர்த்தியும்; 'மனத்துக்கண் மாசிலனாதல்......'' எனும் தொடரில் திரு. ஜெயராஜும் கருத்துரை வழங்கினர்.

இரண்டாம் கட்ட நிகழ்வுகள் ஆதீன கலாசாரமண்டபத்தில் மாலை 4. 30 க்கு நாதஸ்வர கலாநிதி என்.கே. பத்மநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் தொடங்கியது.

கடவுள் - தமிழ் வாழ்த்துப் பாடல்களை சங்கீதபூஷணம், எஸ். பத்மலிங்கம் பாட, பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமை வகித்தார். காலஞ்சென்ற தவில் மேதை என். ஆர் சின்னராசாவின் உருவப்படத் திறப்பு வைபவமும், அதன் அஞ்சலிஉரையும் நிகழ விழா நிறைவுரையை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தினார்.

இதனையடுத்து, விழாவின் முதல் நாள் நிகழ்வில் ஒன்றான பட்டிமன்றத்தின் மேன் முறையீட்டு உயர் நீதிமன்று கூடியது நடுவர் ஆயத்து முக்கூட்டு நீதியரசர்களாக சொக்கன் (தலைவர்) நாக. சண்முகநாதபிள்ளை, பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் ஆகியோர் வீற்றிருக்க. கீழ்மன்றுப் பதிவாளர் கல்வயல் வே. குமாரசாமி வழக்குப் பதிவுகளை முன் வைத்தார். கைகேயி அணி விலக்கப்பட்டமைக்கான காரண காரியங்களை முன்வைத்து நோக்குநர் அவைக்குழுத் தலைவர் திரு. அநு வை நாகராஜன் எதிர்வாதம் செய்ய, அதனை, எதிர்த்து, காரை செ. சுந்தரம் பிள்ளை வாதிட்டார். கீழ்மன்ற நடுவர் தீர்ப்பால் பாதிக்கப்பட்ட இலக்குவன் அணியின் சார்பில் திரு. இ. ஜெயராஜ் வாதிட்டார். இதே நடுவரால் தீர்ப்பு வழங்கப்பெற்று வெற்றிபெற்ற கும்பகர்ணன் அணியின் சார்பில் கவிஞர் சோ. பத்மநாதன் எதிர்வாதம் செய்தார். மேன்முறையீட்டு வாதப் பிரதிவாதங்கள் நறுக்குத் தெறித்தாற்போல் சுவையாகவும் அவையோரின் கரகோச ஆரவாரத்துடனும், மிகவும் உற்சாகமாக நடந்தேறின. ஈற்றில், கீழ்மன்று அளித்த தீர்ப்பை ஒட்டி, கும்பகர்ணன் அணியின் வெற்றியை நடுவர் ஆயத்து நீதியரசர்கள் ஊர்ஜிதப்படுத்தி தீர்ப்பு வழங்கினர்.

அத்துடன் அன்றைய விழா சில பல நினைவுச் சுவடுகளை 'பெருவிழா முத்திரைகளாக' ஆர்வலர் மனதில் பதித்து நிறைவெய்தியது. குறிப்பாக -

★ நான்கு தினங்கள் தொடர்ந்து நாவலர் கலாசார மண்டபத்திலும் நல்லை ஆதீனக் கலாசார மண்டபத்திலும் கம்பனுக்கு ஒரு பெருவிழா இக்கட்டான ஒரு காலச்சூழ்நிலையில் நடந்தேறியிருக்கிறது.

★ ஆக்கபூர்வமான கருத்துக்கள் - மரபுவழி பண்பாட்டு நினைவுகள்-கம்பமகத்துவப் பரிசோதனைகள் புதுமை நோக்குகள் என்பன இரை மீட்க வாய்ப்பளிக்கப்பட்டன.

★ விழா நடைபெற்ற ஒவ்வொரு பொழுதுகளிலும் (பகல் - இரவு) அறிஞர்களும், பேராளர்களும் அறுசுவை உண்டிகள் உண்டு மகிழவும். கலந்துரை செய்யவும் வாய்ப்பளிக்கப்பட்டனர் (இதற்கான சகலவித ஒழுங்குகளையும், உதவிகளையும் யாழ் ஞானம்ஸ் நிறுவனம், தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம்,இலங்கை வங்கி யாழ். கிளை ஊழியர்கள், யாழ் மாநகராட்சி மன்ற ஊழியர் நலன்புரிச்சங்கம், புறோ மோட்டர்ஸ் என்ஜினியரிங் நிறுவனம் 'உதயன்' நிருவாக இயக்குநர், அ. இ. கம்பன்கழகம் என்போர் தந்து புரந்தனர்,

விருந்துக்கான அழைப்புக்களும் கவிதை வடிவில் அமைந்திருந்தது ஓர் புதுமை; உதாரணத்திற்கு, ஒன்று.

ஆ! அந்தக் கம்பன் அருங்
கவிதை போல் இவரும்
பா வடித்த கவியரங்கம்
பார்த்திருந்தீர் - நாமுமக்கு
நல்ல விருந்திடுவோம் நம்
கம்பன் கோட்டமதில்
எல்லோரும் ஏற்பீர் இனிது.

★ இவற்றுடன், கம்பன் கழகம் எடுத்த இப்பெருவிழா ஒழுங்கு, அமைவு, அலங்காரம் காலந்தவறா நிகழ்வுகள், கௌரவம் போன்றவை ஓர் இளைய தலைமுறை எமக்குக் காத்திரமாகவும், அதே வேளையில் கனதியாகவும் காத்திருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டி நிற்கிறது.

இவ்வொன்றே, 'கம்பன் புகழ்பாடி, கன்னித் தமிழ் வளர்க்கப் போதும்' என்ற ஒரு மன நிறைவை நன் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கப் போதுமானது.

# குதூகலம்

## எதிரியின் உதவி

ஒரு படையின் கொமாண்டர் ஜெனரல் களத்தில் மேற்பார்வைக்குப் போயிருந்த சமயம், சமீபத்தில் தெரிந்த ஒரு குன்றிலிருந்து மூன்று குண்டுகள் அவன் தலைக்கு மேலால் கூவிக்கொண்டு பறந்தன அவனும், கூடச் சென்ற சார்ஜனும் பங்கரில் பாய்ந்து பதுங்கிக் கொண்டனர். வெளியே வந்ததும், சார்ஜன்ட் அந்த பதுங்கிச் சுடுபவனைக் கண்டுபிடி என்றான் கொமாண்டர்.

'அவன் இருக்கும் இடம் எங்களுக்குத் தெரியும் சார்' என்றான் சார்ஜன்ட்.

அப்படியென்றால் ஏன் அவனைச் சுடவில்லை?'

சார்ஜன்ட் விளக்கமாகச் சொன்னான்.

'சார், அவன் இந்தக் குன்றில் மறைந்திருந்து ஆறு மாதமாகச் சுடுகிறான் யாருமே செத்ததில்லை, நாங்கள் அவனைச் சுட்டுவிட்டால், அந்த இடத்தில் சரியாகச் சுடக் கூடியவனை வைத்து விடுவார்கள்.

★ ★

## நீயும் போ!

'முருகா . . வாழவேண்டிய வயதில் குருத்துக்கள் களத்தில் கருகிப்போகின்றனவே . . பார்த்துக் கொண்டிருக்கிறாயே... அக்கிரமத்தை அழித்து அறத்தை நிலைநாட்ட நீ எழுந்தருள மாட்டாயா: .? '

'பக்தா, உன் பக்தியை மெச்சுகிறேன் .:. ஆனால் நீ மட்டும் உன் கடமையைச் செய்யாமல் இங்கிருந்தால் வெற்றி எப்படி:..? வேண்டிய பலத்தைத் தருகிறேன் உன் கடமையைச் செய் வெற்றி நிச்சயம்.'

★ ★

## வாழ்த்துக்கள்

மிதமாக மது அருந்திய ஒருவன், தள்ளாடியபடி ஒரு மதுக்கடைக்குள் புகுந்தான். 'எல்லோருக்கும் என் புத்தாண்டு வாழ்த்துக்கள்' என்றான்.

எஸ். பி கே.

அருகில் இருந்த ஒருவன், 'மடையா ... இது பங்குனி நடுப்பகுதி.- ' என்றான்.

அதிர்ச்சிபடைந்தவனாய், வந்தவன் சத்தமிட்டான்.

'ஓ ..கடவுளே என் மனைவி என்னைத் திட்டப் போகிறாள். முன் எப்போதுமே நான் இவ்வளவு தாமதித்துப் போனதில்லை.''

★ ★

இன்றைய குழந்தைகள் ஆறு வயதில் எல்லாக் கேள்விகளும் தெரிந்தவர்கள் போல் காணப்படுகிறார்கள் பதினாறு வயதில் அவற்றுக்கான பதில்களையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

# யாழ்ப்பாணம் மீதான ராணுவப் படையெடுப்பு; புலிகளின் புதிய போர் யுக்தியால் குழப்பம்

1991 ஒக்டோபரில் தீவுப்பகுதியிலும், பூநகரிப் பகுதியிலும் இராணுவம் தரையிறங்கியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான இராணுவ நடவடிக்கைகள் குறித்து இராணுவத்தரப்பினர் தீவிரமாகவும், ஆவேசமாகவும் பேசினர். ''யாழ்ப்பாண நகரில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் தான் நிற்கிறோம் விரும்பிய நேரத்தில் யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிடலாம்'' என தளபதி ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

இதேவேளை பாரிய யுத்தத் தயாரிப்புக்களிலும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டிருந்தது. கிழக்கு ஐரோப்பியாவில் இருந்தும், சீனாவிலிருந்தும் யுத்த தளபாடங்களை சிறிலங்கா அரசு கொள்வனவு செய்தது. இதில் இராணுவத்தினருக்குத் தேவையான யுத்த டாங்கிகளும், பீரங்கிகளும், கடற்படைக்குத் தேவையான பீரங்கிப் படகுகளும்; தரையிறங்கும் கப்பல்களும், விமானப் படைக்குத்தேவையான குண்டு வீச்சு மற்றும் போக்குவரத்து விமானங்களும் அடங்கியிருந்தன.

பெரும் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இந்த இராணுவத் தளபாடங்களால் பாதுகாப்புப்படைகள் பலம் பெற்றுள்ளதாகவும்இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. செக்கோஸ்செலோவாக்கியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டாங்கிகள் கொழும்பு வந்து அடைந்தபோது அதைப் பார்வையிட்ட ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, இந்த டாங்கிகள் ஆனையிறவுப் போரின்போது எம்மிடமிருந்திருப்பின் இரு தினங்களில் வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவை அடைந்திருப்போம் என்றார்.

இதன்பின் சீனாவிலிருந்தும் டாங்கிகள் (ரி-85) வந்துசேர்ந்ததும் டாங்கிகளின் துணையுடன் யாழ்ப்பாணம் மீது மேற்கொள்வதற்கான இராணுவ நடவடிக்கைத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால், நடவடிக்கைகளுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், பெப்ரவரி மாத இறுதியில் தாக்குதல் இடம்பெறலாமெனப் பரவலாகப் பேசப்பட்டது.

இதேவேளை பெரும்பிரசார யுத்தம்ஒன்று யாழ் குடாநாட்டு மக்கள்மீது தொடுக்கப்பட்டது. இராணுவம் எந்த வேளையிலும் தாக்குதல் நடத்தலாமென்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தபிரசார யுத்தம் மனோவியல் ரீதியாக புலிகளையும் தமிழ் மக்களையும் தோற்கடிக்க மேற்கொள்ளப்பட்டது எனப் பின்னர் இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

> விடுதலைப் புலிகளின் புதிய இராணுவத் தந்திரோபாயம், இதனால் இராணுவத்தினருக்கேற்பட்ட பாரிய இழப்புக்கள் என்பன அவர்களையும் புதிய ஓர் தந்திரோபாயம் ஒன்றை வகுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்புதிய தந்திரோபாயத்தில் தாக்குவது என்பதைவிட தாக்குதலுக்கு தயாராக இருத்தல் என்பதே பிரதான நோக்கமாகும்.

### புலிகளின் புதிய தந்திரோபாயம்

ஆனால், இக்காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் தமது போர்முறைத் தந்திரோபாயத்தில் மேற்கொண்ட பெரும் மாற்றம் இராணுவ தரப்பினருக்கு எதிர்பாராத பேரிழப்பை ஏற்படுத்தியது. சங்கிலித்தொடர்போன்ற தொடர்ச்சியான வடக்கு கிழக்குப் பகுதியில் இராணுவ காவலரண்கள்மீது, ரோந்து அணிகள்மீது புலிகள் மேற்கொண்ட மின்னல்வேக அதிரடித்தாக்குதல்கள் இராணுவத்தினர் தமது போர்முறைத்திட்டத்தை பரிசீலனை செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களினால் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள பெருமளவிலான உயிரிழப்புக்கள் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சிபோதாது என்றும், அவர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கென மீள்பயிற்சிக்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

### இராணுவ தந்திரோபாயத்தில் மாற்றம் தேவை

புலிகளின் புதிய தந்திரோபாயத்தால், சிறிலங்கா இராணுவமும் தமது பாதுகாப்புக் குறித்து புதிய தந்திரோபாயங்களை வகுக்க வேண்டிய நிலையை அவர்களுக்கு ஏற்படுத்தியது. தீவுப்பகுதியிலும் பூநகரிப் பகுதியிலும் இராணுவத்தினருடன் பெரும் மோதலில் ஈடுபடாமல் புலிகள் பின்வாங்கியபோது, புலிகள் பலவீனப்பட்டுவிட்டார்கள் என எண்ணிய சிறிலங்கா இராணுவத்தினருக்கு புலிகள் கிழக்கில் கூட சில இராணுவ அணிகளை முழுமையாக அழித்துவிடும் சக்தி பெற்றுள்ளமை ஆச்சரியத்தை கொடுப்பதாகவே இருக்கிறது இந் நிலையில், இராணுவத்தினரின் பெரும் இழப்புக்களை சமாளிப்பதற்கு புதிய திட்டங்களை வரைவதற்கு வேண்டிய நிர்ப்பந்தம் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்டது.

இது தொடர்பான ஓர் பரீட்சார்த்த நடவடிக்கையே சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட வன்னி விக்கிரம III ஆகும். இந் நடவடிக்கையின் மூலம் புலிகள் தந்திரோபாயங்களையும், தாக்குதல் முறைகளையும் அறிந்து கொள்வதே இராணுவத்தின் நோக்கமாக இருந்துள்ளது. வன்னிவிக்கிரம III குறித்து வடபகுதி இராணுவத் தளபதி டென்சில் கொப்பகடுவ குறிப்பிடுகையில் கடைசித்தாக்குதலின் போது புலிகள் என்ன செய்தார்கள் என்பதையும் எப்படித் தாக்குகின்றார்கள் என்பதையும் பார்வையிட்டோம் என்றார் அதாவது இதில் இராணுவத் தரப்பு பரீட்சித்துப் பார்த்தது என்னவெனில் புலிகள் ஓர் மரபுவழி இராணுவமாக மோதுகின்றார்களா? இல்லையா? என்பதேயாகும். இதனால், இராணுவத்திற்கான புதிய தந்திரோபாயம் அவசியமானது என்பதை வன்னிவிக்கிரம III திட்டவட்டமாக இராணுவத்தினருக்கு உணர்த்தியது இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரின் தந்திரோபாயத்திலும் மாற்றங்கள் உடன் ஏற்பட்டுள்ளன.

புதிய இராணுவத்தினரின் தந்திரோபாயத்தின்படி பாதுகாப்பான இராணுவ எல்லைக்கோடு ஒன்றை வைத்துக் கொள்ளும் அதேவேளை இராணுவத்தை எப்பொழுதும் தாக்குதலுக்கு தயார் நிலையில் வைத்திருத்தல் என்பதே புதிய யுக்தியாக வகுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரமே வன்னிவிக்ரம III நடவடிக்கையில் வெளியேறி சிலகிலோமீற்றர் முன்னேறி வந்த இராணுவத்தினர், பாதுகாப்பு எல்லைப் பகுதிக்கு திருப்பி அழைக்கப்பட்டனர் என வட பகுதி இராணுவத் தளபதி டென்சில் கொப்பகடுவ தெரிவித்துள்ளார்.

**ஜெயராஜ்**

### யாழ்ப்பாணம் மீதான தாக்குதல்!

இந் நிலையில், யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் நடவடிக்கை குறித்து உடனடி தீர்மானங்கள் மேற்கொள்வதில் இராணுவத்தரப்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன. யாழ்ப்பாணம் மீதான இராணுவத்தினரின் தாக்குதலுக்கு. புலிகளின் புதிய யுத்த தந்திரோபாயம் குடா நாட்டில் இருக்கும்என அறிய முடியாது உள்ளதோடு புலிகளின் புதிய தாக்குதல்களினால் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய உயிரிழப்பும், இராணுவத்தினருக்கும் பயிற்சிபோதாது எனத் தற்பொழுது எழுந்துள்ள பிரச்சினையும், சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட டாங்கிகள், போர்தளபாடங்கள் என்பனவற்றின் தரமின்மையும், யாழ்ப்பாணம் மீதான இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைக்கு சற்று சிரமத்தை ஏற்படுத்தும் அம்சங்களாகவுள்ளன.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால், சிறிலங்கா இராணுவத் தரப்பினரின் மனோநிலையும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு

(8ஆம் பக்கம் பார்க்க)



ஹமில்டன்

---

**கலைஞர்களால்**

காலத்தில் கைதிகளாகஉள்ளே சென்றவர்கள் கவிஞர்களாக வெளியே வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில் சுமார் பதினைந்துபேர் தேறியுள்ளார்கள். ஒரு சமூகத்தின் தேவை காலம் ஆகியன தான் இலக்கியத் தன்மையைத் தீர்மானிக்கும். காலம் எதை வேண்டி நிற்கிறதோ அது தான் கவிதையின் பொருளாக அமையும். சமயம் மேலோங்கி நிற்கும்காலத்தில் சமயம் கருப்பொருளாக அமையும். தமிழ் நாட்டில் நீண்டகாலமாக காணப்பட்டு வந்த மரபைப் பக்தி இயக்கம் எதிர்த்துப் போராடியது. அப்போதைய சமூகத் தேவைக்கு ஏற்றவாறு பக்தி இயக்கத்தை அடியொற்றிஇலக்கிய முயற்சிகள் இடம்பெற்றன. லத்தீன் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் சாதாரண மக்களின் போராட்டங்களை நியாயப்படுத்தும் வகையில் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கு விளக்கம் தரப்படுகிறது. சமகாலத்தேவையினால் நிக்கராகுவாவின் புகழ்பெற்ற கவிஞராக ஏர்னஸ்டோ கார்டினல் தோன்றினார்.

கேள்வி:

உங்கள் சிற்பத் தொழிலைப் பற்றி நினைவு வருகிறது. முப்பதுவருடங்களுக்குமேலாககவிதையில் வாழ்ந்து வரும் உங்களுக்குச் சிற்பத்தில் நெருக்கமான பரிச்சயம் உள்ளது -இல்லையா?

பதில்:

சிற்பம் வாழ்க்கைத் தொழிலாக இருந்தது. ஆனால் அது வாழ்க்கைக்கு வருமானம்தரும் தொழிலாக அமையவில்லை. அதனால் வருமானம் தரக்கூடிய வேறு தொழிலை நாடி வாழ்க்கைச்சக்கரத்தைச்சுழல வைக்கவேண்டியிருந்தது சட்டநாதர் சிவன் கோயில் தேரில் உள்ள விக்கிரகங்களை நானே செய்தேன். முப்பத்தாறு சிற்பங்களும் எனது கைவண்ணம் (இந்த இடத்தில் அழுத்தமாகப் பேசினார்) எனது குடும்பத்துடன் சேர்ந்து மேலும் பதினாறு தேர்களைச் செய்துள்ளேன்.

கேள்வி:

ஒரு முக்கியமான கேள்வி. நீங்கள் பொறுப்பாளனாக இருந்து நிர்வகிக்கும் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தைப்பற்றி விளக்கம் தர முடியுமா?

பதில்:

கலைஞர்களால் இந்த நாடு வளம் பெறவும், இந்த மண்ணால் கலைஞர்கள் சுகம்பெறவும் கூடியநிலைகளை உருவாக்கியிருக்கிறோம் தன்னாதிக்கம் உள்ள அரசு செய்வது போல ஒரு கல்லூரியை அமைத்துள்ளோம் கணிசமான கலைஞர்களை ஒன்றிணைத்து ஒலிப்பதிவு நாடாக்களை வெளியிட்டு வருகிறோம். இப்பாடல்கள் எமதுமக்களைப் போராட்டத்தின்பால் அண்சேர்த்திருக்கிறது. எதிரிளே நாம்சரியான பாதையில் செல்கிறோம் என்பதை ஒத்துக்கொள்ள வைத்திருக்கின்றோம். முத்தமிழ் விழாவை நடத்தி இந்த மண்ணினை மகிமைப்படுத்திய பத்துப்பேருக்கு வருடாவருடம் விருது வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம். தமிழீழத்தில் எல்லாப் பகுதிகளிலும் கழகம் காலை அகல வைத்துள்ளது. உலகத்தில் ஐந்து நாடுகளில் கிளைச் சங்கங்கள் இயங்குகின்றன. எமது இன்றையபோராட்டம்தேவையானது என்பதை மக்களுக்குப் புரிய வைத்துள்ளோம்.

---

ஒரு

''ஊர்விட்டு ஊர் போறதாவது? அபத்தம் இனிமே நீ எழுதக்கூடாது அப்படி எழுதினாலும் பிரசுரத்துக்காக எழுதக்கூடாது''

'இப்படிச் சொல்றது நியாயமா? கல்யாணத்திற்கு முந்தியிலிருந்தே நான் எழுதிக்கிட்டு வரேன்'

'கல்யாணத்திற்கு அப்புறம் ஒரு பெண் தன்னை மாத்திக்கதான் வேணும்?'

'என் எழுத்து வேலையால் எந்த விதத்தில் உங்களைப் பாதிக்க விட்டேன்?'

'அநாவசியப் பேச்சு வேண்டாம்: நீ எழுதறதை விடமுடியுமா. முடியாதா?'

'முடியாது'

'அப்போ நம்ம கல்யாணத்தைத்தான் விட வேண்டியிருக்கும்'

'அது உங்க இஷ்டம்'

நினைவு கலந்த போது-

'உன் ஐஸ்கிரீம் காலியாகி ரொம்ப நேரமாகுது ஹேமா' என்று துளசியின் குரல் மென்மையாய் ஒலித்துக் கொண்டிருந்தது. ஹேமா சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

'ஸாரி, ஏதோ யோசிச்சுக்கிட்டு.. நீ கங்கிராஜுலேட் பண்ணேயில்ல துளசி? ரொம்ப தாங்க்ஸ், இன்னிக்கு இது எனக்கு ரொம்பப்பெரிய அனுபவம்'

அறைக்குள் போவோர் வருவோரான இடைவிடாத தற்றோட்ட சலனம், பேச்சுக் குரல்கள் இரைச்சலின் அடர்த்தியில் அங்கங்கு தனியே பிரிந்து நின்று அர்த்தமாய் ஒலிக்கும் ஒரு சொல், ஒரு வாக்கியம் மாலை இருளிலும் குழல் விளக்குகளின் நிழலற்ற ஒளியில் பகலின் வெள்ளிப்பிரகாசம்.

காபி வந்தது கையில் எடுத்துக் கொண்டே துளசி நீ இப்போ எங்கே இருக்கே ஹேமா?' என்றாள்

'என் அப்பாம்மா வோடதான். அவங்களுக்கும் என் உதவி தேவைப்படுது'

'கல்யாணம் பண்ணிக்கிறதாயில்லையா?'

ஹேமா காபி குடிப்பதை நிறுத்திவிட்டு அவளைக் கூர்ந்து பார்த்தாள். 'விளையாடறியா?'

இதில் விளையாட்டென்ன?

''அடுத்த மாதம் வந்தால் எனக்கு முப்பத்து நாலு வயசாகும்''. ''தெரியும் நீயும் நானும் ஒரே வயசுதானே''. ''பின்னே?'' ஹேமா மீண்டும் காபியை உறிஞ்சினால். ''முப்பத்து நாலு வயசில் ஒரு பெண் கல்யாணம் செஞ்சுக்கக் கூடாதா என்ன?''

''இப்போது நான் அமைதியாய் வாழ்ந்துக்கிட்டிருக்கேன்.'' ''நான் இல்லையென்று சொல்லலியே''

''கல்யாணம் தான் ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையா துளசி?''

''இல்லை. நிச்சயமா நான் அப்படி நினைக்கலே. ஆனா, உன் விஷயத்தில் அது ஒரு அடிப்படை நியாயத்தைநிலை நாட்டுகிறதாய் இருக்குமென்னு நினைக்கிறேன்.''

''எப்படிச் சொல்றே?''

ஒரு கணம் தாமதித்து துளசி கூறினாள்: ''அண்ணா மறுபடியும் கல்யாணம் செய்துக்கப் போறார்.'' ''அப்படியா? என் வாழ்த்துக்கள். இந்தக் கல்யாணமாவது அவர் மனசு போல அமையட்டும் காபி நல்லாயிருக்கு இல்லே?''

''விவாகரத்தான ஆண் பிள்ளைக்கு சுலபமா மறுமணம் ஆக முடியும்னா விவாகரத்தான பெண்ணுக்கு மட்டும் ஏன் கூடாது? காபி நல்லாத்தான் இருக்கு. இன்னொரு கப் குடிக்கலாமா?''

காபி பருகி முடித்து துளசி 'பில்' பணமும் இனாமும் கொடுத்த பின் இருவரும் வெளியே வந்தார்கள். தெருவைப் பார்த்தவாறு தோல் பைகளும் புதுச் சேலைகள் கனக்கும் பிளாஸ்டிக் பைகளுமாய் நின்றார்கள். பிறகு மெல்லத் தலை திருப்பிப் பார்வைகளைச் சந்திக்க விட்டார்கள்.

''உன்னை மறுபடியும் இப்படி சந்தித்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு துளசி.'' ''அந்த சந்தோசம் எனக்கு மட்டுமில்லையா? இரு முகங்களிலும் முறுவல் பூத்தது.

நன்றி- இந்தியா ருடே

# தற்பாதுகாப்பு துப்பாக்கிகள் ஊழியரை மிரட்ட பயன்பட்டன

**- தேர்தல் ஆணையாளர்**

(கொழும்பு)

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது 200 க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகள் தாக்கப்பட்டன. தற்பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட துப்பாக்கிகள் தேர்தல் ஊழியர்களைப் பயமுறுத்தி வாக்குப் பெட்டிகளில் வாக்குச் சீட்டுக் கட்டுகளை போடப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறாக 16 சம்பவங்கள் இடம் பெற்றன. இத்தகவல்களைத் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா கடந்த வாரம் சிறிலங்கா ஜனாதிபதியிடம் கையளித்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தேர்தல்களில் தமது வாக்குகளையும் முன்னுரிமை வாக்குகளையும் அதிகரிப்பதற்காகக் கட்சிகளும் வேட்பாளர்களும் நடவடிக்கை எடுத்த பல்வேறு சம்பவங்கள் உள்ளன.

இந்த நேரத்தில் துஷ்பிரயோகங்களுக்கு மூன்று வகையான காரணிகள் உள்ளன. தாராளமாகத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டமை, முன்னுரிமை வாக்குகளைப் பெறுவதற்கான ஆர்வம், துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு பொலிசாரும் இராணுவமும் தவறியமை என்பனவாகும்.

வேட்பாளர்களே சில ஆயுதக் குழுக்களுக்கு தலைமை தாங்கியும் வந்து வாக்குப் பெட்டிக்குள் பலவந்தமாக பல வாக்குச் சீட்டுக்களைத் திணித்த பின் தாம் ஜனநாயகத்தைப் பாதுகாக்க இவ்வாறு செய்கிறோம்என கூறிக் கொண்டனர்.

எமது தரம் எவ்வளவிற்குத் தாழ்ந்திருக்கின்றதுஎன்பதற்கு இது தவிர வேறு சாட்சியமில்லை. முன்னுரிமை வாக்கு முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைாக இந்த துஷ்பிரயோகமாகும்' முன்னுரிமை வாக்களிக்கும் முறை ரத்துச் செய்யப்பட்டு அதற்குமாறாக அரைவாசி எம். பீ களை பிராந்திய அடிப்படையிலும் ஏனையோரை தேசிய மட்டத்தில் விகிதாசார பிரதிநித்துவம் மூலம் தேர்ந்தெடுக்கும் ஜேர்மன் பாணியிலான தேர்தல் முறை அமுல்படுத்தப்பட வேண்டும் என தேர்தல் ஆணையாளர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்



### யாழ்ப்பாணம்

பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு எட்ட முடியாது என இராணுவத் தரப்பினரும் தற்பொழுது உணரத்தலைப்பட்டுள்ளனர். இதனை சிறிலங்கா கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை தளகர்த்தாவின் பத்திரிகைப் பேட்டியில் இருந்தும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அவர் 'அரசியல் மற்றும் பிற வேறுபாடுகளை மக்கள் மறந்துவிடவேண்டும். நிரந்தர தீர்வொன்றைக்காண இணைந்த முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மக்கள் தமது தலைவர்களை வற்புறுத்த வேண்டும்' எனவும் தெரிவித்துள்ளார். அத்தோடு புலிகள் உலகிலேயே தலைசிறந்த விடுதலை இயக்கம், அதன் தலைவர் பிரபாகரன் ஓர் ஆளுமை மிக்க தலைவர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இராணுவத்தினரின் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணத்தின் மீது பெரும் படை எடுப்பை நடத்திப் புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் புலிகளின் தாக்குதலைக் குறைக்கலாம் எனக் கருதுகின்றனர். ஆனால், இராணுவத் தரப்பில் இதற்கு குறைவான ஆதரவும், அரசாங்கத்திடம் முழுமையான ஒத்துழைப்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்தகால அனுபவத்தைக் கொண்டும் தற்போதைய கிழக்கின் அநுபவத்தைக் கொண்டும் யாழ்ப்பாணக்குடாநாட்டைக் கைப்பற்றுவதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்திவிடலாம் என்பதைப் பலர் ஏற்பதாக இல்லை.

### அரசாங்கத்தின் போக்கில் திருப்தியில்லை

இதேவேளை அரசாங்கத்தினரின் போக்குகள் குறித்தும் இராணுவத் தரப்பினர் அதிருப்தி கொண்டுள்ளனர். புலிகளுடன் தங்களை மோதவிடும் அரசாங்கம் இறுதியில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே ஆகவேண்டும் என்ற நிலையில் நமது இழப்புக்களை தேவையற்ற ஒன்றாக இராணுவத்தினர் கருதத் தொடங்கியுள்ளனர். அரசாங்கம் இராணுவத்தைப் பகடக்காய்களாக்கி அரசியல் லாபம் தேட முற்படுவதாக இராணுவத்தரப்பில் ஒருபகுதியினர் கருதுகின்றனர்.

அத்தோடு, பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சிறிலங்கா அரசாங்கம் மேற்கு நாடுகளின் அழுத்தங்களுக்கு உட்பட்டு இராணுவத்தினர் மீது சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையும், மனித மீறல் தொடர்பாகச் சில அதிகாரிகளைக் காட்டிக்கொடுக்க முற்பட்டுள்ளமையும் சிலர்மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளமையும் இராணுவத் தரப்பில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. 'தேசத்தின் பாதுகாவலர்களாக' தம்மைக் கருதிக் கொண்டவர்களும், கட்டுப்பாடு எதுவுமின்றி மிருகத்தனமாக செயற்பட்டவர்களுக்கும் இவ்விதிகள் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியதில் அதிர்ச்சி ஒன்றுமில்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் மீதான திட்டமிட்ட பாரியஇராணுவ நடவடிக்கை உடன் நடைபெறுமா என்பது குறித்து குழப்பமான நிலையே நிலவுகின்றது. இராணுவத் தரப்பு தாக்குதலுக்கான தயாரிப்புக்கள் குறித்து ஏற்பாடுகளைச் செய்து முடித்துள்ள போதும், முன்னர் வகுத்துக் கொண்ட யுத்த தந்திரோபாயங்களும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் பயன்பொருத்தமாக அமையுமா என்பது குறித்து இராணுவத் தரப்பில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதேவேளை, வடமாகாண இராணுவத் தளபதி டென்சின் கொப்பகடுவ வெளியிட்டுள்ள புதிய இராணுவ யுத்தியானது, சிறிலங்காவின் யுத்ததந்திரோபாயத்தில் குறிப்பிடக்கூடிய மாற்றத்தை விடுதலைப் புலிகளின் கடந்த சில மாதத் தாக்குதல்கள் ஏற்படுத்தியுள்ளது என்பதை மட்டும் திட்டவட்டமாகக் கூறலாம்.

## மரண அறிவித்தல்

**திரு. பொன்னுத்துரைஐயர் பாலேந்திரா ஐயர்**

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய குருக்கள் திரு. பொன்னுத்துரை ஐயர் பாலேந்திரா ஐயர் காலமாகிவிட்டார்

ஈமக்கிரியைகள் 13-03-92 வெள்ளிக்கிழமை (இன்று)காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

(2290) தகவல் : S. செல்வேந்திரா

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**தேர்தல் ஆணையாளர்**

## அறிக்கை குறித்து ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு

கடந்த பொதுத் தேர்தல் பற்றி தேர்தல் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து ஆராய பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக சிறிலங்கா அமைச்சரவை பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இந்த தெரிவுக் குழு தனது அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் எனவும் தேர்தல் ஆணையாளரின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவுா அவர் தெரிவித்தார்.

### ராணுவ

இந்த தாக்குதல் சிறிலங்கா இராணுவத்தினருக்கு நெருக்கமாக 35 மீற்றர் தூரத்தில் வைத்து நிகழ்த்தப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### உவர்நீர்

இந்த உவர்நீர் தடுப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட இருக்கிறது. நீண்டகாலத்திற்கு முன்னரே தயாரிக்கப்பட்ட இத்திட்டம் மேற்படி நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் இந்த நிறுவன அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டதைத் தொடர்ந்து திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு கொள்கையளவில் சம்மதம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் இத்திட்டம் தொடர்பாகமேற்படி நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பகுதியை நேரடியாக அவதானிக்க வேண்டியுள்ளது. இதற்காக மிகவிரைவில் உயர் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வர இருக்கிறது.

இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்பட்சத்தில் மேற்படி கரையோரப் பகுதியூடாக உவர்நீர் ஊடுருவுவது தடுக்கப்படும். (க)

### சென்னையில்

ளமும் பகிரங்கப்படுத்தவில்லை என்றும்,

இது தொடர்பாக இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் நெவில்கனகரட்னா தெரிவித்த கருத்து அவரது சொந்தக் கருத்தாகும் என்றும் அது சிறிலங்கா அரசாங்கத்தின் கருத்தல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நெவில் கனகரட்னா ''விடுதலைப் புலிகளே மிகவும் பலம் வாய்ந்த சக்தி ஏனைய தமிழ்க் குழுக்களுக்கு தமிழ்ப்பகுதிகளில் தளம் கூட இல்லை. எனவே விடுதலைப் புலிகள் பங்குபற்றாமல் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது'' என சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் குறிப்பிட்டது தெரிந்ததே.

## கலந்துரையாடல் நேரமாற்றம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தமிழீழஆய்வு நிறுவன மையப் பணியகத்தில் பொறியியலாளருடன் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல் அன்று பி.ப, 2 மணிக்கு நடைபெறும் என்று தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வு - 1992

## நேர அட்டவணை

### 15-03.92 ஞாயிறு

| | வினாப்பத்திரம்-1 | வினாப்பத்திரம் 2 |
|---|---|---|
| 7 ஆம் ஆண்டு | 8.30-10 30 | 11 00-12 30 |
| 8 ஆம் ஆண்டு | 8,30-10.30 | 11 00-12 .30 |
| 9 ஆம் ஆண்டு | 8.30-10 30 | 11 00-12 .30 |
| 10 ஆம் ஆண்டு | 8.30-11. | 11.30-1 30 |
| 11 ஆம் ஆண்டு | 8·30-11·00 | 11.30-1 30 |
| 12 ஆம் ஆண்டு | 8 30-11.30 | 12 00-2 00 |
| 13 ஆம் ஆண்டு | 8 30-11 30 | 12 00 -2 00 |

## பெண்களுடன் சேட்டை மூன்று இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

வீதிகளில் நின்று பெண்களுடன் சேட்டையில் ஈடுபட்ட மூன்று இளைஞர்களை நேற்றுக் தமிழீழக் காவல் துறையினர் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம்மாட்டீன்வீதி ஸ்ரேசன் வீதி சந்தியில் நின்று வீதியால் செல்லும் யுவதிகளுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற் கொண்டவர்களே கைது செய்யப்பட்டனர்.

இவர்களது நடவடிக்கைகள் குறித்துப் பல பொது மக்கள் தமிழீழக் காவல்துறையினருக்கு கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாக தமிழீழக் காவல்துறை பொறுப்பாளர் தெரிவித்தார்.

இம் மூன்று இளைஞர்களும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ச)

## ஏப்ரலில் பரீட்சை நடத்த தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு நடத்தப்படாமல் தடைப்பட்டுப் போன க.பொ.த. உயர் தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது

இதற்கான விசேட பரீட்சையை அடுத்த மாதம் முற்பகுதியில் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்காக யாழ் கல்வித்திணைக்கள அதிகாரிகள் கொழும்பில் தங்கிநின்று பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுடன் பேசிவருகின்றனர்.

ஏப்பிரல் மாதம் 2 ஆம் திகதி இப்பரீட்சையை நடாத்துவதற்கு ஏற்கனவே பரீட்சை ஆணையாளர் உறுதி அளித்துள்ளார். எனினும் இந்த விடயத்தில் அனைவரினது ஒத்துழைப்பும் அவசியம் என்பதால் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

அதேவேளை இவ்விசேட பரீட்சையை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி திரு. பிரேமதாசா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக கொழும்பில் இருந்து இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் இப்பரீட்சை தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்காக யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இம்மாதம் 17ஆம் திகதி கொழும்பு செல்ல இருக்கிறார். (க)

### போக்குவரத்து

டும் செல்லுபடியாகும். ஏனையோர் சாதாரண நடைமுறையில் உள்ளது போன்று அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். 1992-03- 20 ஆம் திகதி தொடக்கம் இது நடைமுறைக்கு வருகின்றது என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.